திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

மாலை : 9 9—9—55 : வெள்ளி : 14-பக்கங்கள் : விலை 3 அணா மலர் : 4

'சிதம்பர ரகசியமா?'

மைசூர் முதலமைச்சர் தோழர் அனுமந்தய்யா அவர்களுக்கு சென்னை மேயர் தோழர் [illegible] எ. சிதம்பரம் அவர்கள் சென்ற வாரம் மைலேடீஸ் பூங்காவில் மகத்தான விருந்து ஒன்று நடத்தினர். இந்த விருந்துக்கு முதலமைச்சர் காமராசரும் ஏராளமான உத்தியோகஸ்தர்களும் ஆட்சிபீடத்தின் தூண்கள் என்று கருதப்படுபவர்களும் வந்திருந்தனராம்.

வயிற்றுக்கு உணவு அளித்த மேயர் சிதம்பரம் அவர்கள், மைசூர் முதலமைச்சர் உள்பட அனைவரின் செவிகளுக்கும் உணவு அளிக்கத் தொடங்கினாராம்!

● தமிழகம், கன்னடம், கேரளம் ஆகிய மூன்று பகுதிகளும் மொழிவாரி ராஜ்யமாகப் பிரிக்காமல் தட்சிண பிரதேசம் என்ற பெயரால் ஒரே ராஜ்யமாக இயங்குதல் வேண்டும். இம்மூன்று ராஜ்யங்களுக்கும் பொதுவான சில நலன்கள் உண்டு. இம்மூன்று மொழிகளும் சகோதர மொழிகள். அடிப்படையில் அதிக வேறுபாடில்லாதவைகள். இந்த மூன்று பகுதிகளும் ஒரே ராஜ்யமாக இயங்கினால் நிர்வாகத் துறையிலும் பல நன்மைகள் பெறக்கூடும். இத்தகு முறையைச் செயலில் கொண்டு வர மைசூர் முதலமைச்சர் போன்றவர்கள் ஆவன செய்ய வேண்டு மென்பதே எனது மனப்பூர்வமான வேண்டுதலாகும்—என்று தெரிவித்ததுதான் மேயர் அளித்த செவிக்குணவாகும்!

மைசூர் முதலமைச்சர் அனுமந்தய்யா அவர்கள் இதற்கு பதிலளிக்கும் முறையில் தமது கருத்தைத் தெரிவிக்கையில்:

● இந்தியா இன்று பலமாகாணங்களாக இயங்கி வந்தாலுங்கூட அவையனைத்தும் மாவட்ட ஆட்சி மன்றங்கள் அல்லது நகர சபைகள் போலத்தான் பிரிக்கப் பட்டிருக்கிறதே யன்றி வேறில்லை. எனவே நாம் அனைவரும் ஒரு நாட்டு மக்கள் ஒரு ஆட்சியின் கீழ் இருப்பவர்கள் என்ற மனப்பான்மை வேண்டும். அந்த உணர்வோடுதான் பணியாற்ற வேண்டும். தென்னிந்திய ராஜ்யங்கள் எல்லாம் ஒன்று சேர வேண்டுமென்ற யோசனையை மேயர் வெளியிட்டிருக்கிறார். மொழி அடிப்படையில் ராஜ்யங்களை பிரிப்பது மிக அவசியமாகும் என்ற கொள்கையை காங்கிரஸ் பல ஆண்டுகளாக வற்புறுத்தி வந்து அது மக்களிடையே நிலை பெற்றுவிட்டது. எனினும் இம்முடிவு சரியானதல்ல அவசரப்பட்டு செய்ததாகும் என்று சிலர் எண்ணி வருகின்றனர். மீண்டும் புதிய யோசனையைப் புகுத்தினால் மக்கள் சந்தேகிக்க இடமேற்பட்டுவிடும். என்றாலும் மேயர் கூறியபடி இவையனைத்தும் ஒரேராஜ்யமாக இயங்குவதினால் நிர்வாக வசதி ஏற்படுமானால் அதை நான் ஆட்சேபிக்கமாட்டேன். ஆனால் இந்த யோசனையை மக்களிடையே தெரிவித்து அவர்கள் ஒப்புதல் பெறவேண்டும். இதற்கு பத்திரிகைகளும் பொதுஜனத் தலைவர்களும் அபிப்பிராயத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட வேண்டும். மேயரின் யோசனைக்கு மக்களின் ஆதரவு எவ்வாறிருக்கிறது என்பதை பொறுத்திருந்து பாக்க வேண்டும்' என்பதாக மைசூர் முதலமைச்சர் பேசியிருக்கிறார்!

முதலாவதாக நாம், சென்னை மேயரின் எண்ணத்தைப்பற்றி சிந்திப்போமானால்—தமிழகம், கேரளம், கன்னடம் ஆகியவைகளை மட்டும் சேர்த்துக் கொண்டவர்—ஆந்திரப் பகுதியை மட்டும் குறிப்பிடாதது ஏன் என்பது விளங்கவில்லை. ஆந்திரம் தனிராஜ்யமாக அமைந்துவிட்டதென்று கூறப்படுமானால், திருவிதாங்கூரும் மைசூரும் கூடத்தான் இன்று தனி ராஜ்யங்களாக இயங்கி வருகின்றன. எனவே சென்னை மேயர் தாம் கூறிய தட்சிண பிரதேசத்தில் ஆந்திரத்தைச் சேர்க்கப் படாததின் ''ரகசியம்'' புரியவில்லை.

நிற்க. தமிழ், கன்னடம், கேரளம் ஆகிய மூன்று பகுதிகளும் சேர்ந்து ஒரே ராஜ்யமாக யிருக்க வேண்டுமென்றால் அந்த ஆட்சிமுறை எவ்வாறிருத்தல் வேண்டும்! இன்று சென்னை மாநிலமும், மைசூர், திருவாங்கூரும் தனித் தனியாக இந்தியப் பேரரசின் பிடிப்பில் சிக்கி யிருப்பது போன்றே மூன்று பகுதிகளும் ஒன்று சேர்ந்த தட்சணப் பிரதேசமும் அடிமைப் பட்டிருப்பதா

நக்கீரன்

அல்லது தனிஅரசு பெற்று இயங்குவதா என்பதைப்பற்றி யெல்லாம் ஒன்றும் விளக்கம் கூறவில்லை.

சென்னை மேயர் அவ்விதம் வெளிப்படையாகக் கூறுவதற்கு அச்சப்படுகிறாரா—அல்லது மொழிவாரி ராஜ்ய அமைப்புகள் நாளா வட்டத்தில் தங்களின் ஆதிக்கத்தைத் தட்டிக் கேட்கும் என்ற எண்ணத்தால் மொழிவாரி ராஜ்ய அமைப்புகளைத் தள்ளிப்போட்டு வரும் வடநாட்டு ஆதிக்கத்துக்கு சென்னை மேயர் மறைமுகமாக ஆதரவு தருவதற்காக இவ்வித யோசனையை வெளியிட்டிருக்கிறாரா என்பதும் நமக்கு விளங்கவில்லை. சென்னை மேயர் திரு சிதம்பரம் போன்றவர்கள் வெளிப்படையாகத் தங்களின் கருத்துக்களை தெரிவிக்கும் வசதி பெற்றிருந்துங் கூட திட்டவட்டமாகத் தங்களின் எண்ணத்தைக் கூறாது விடுத்த ரகசியமும் நமக்குப் புரியவில்லை!

அடுத்து மைசூர் முதலமைச்சர் அனுமந்தய்யா அவர்களும் தமது பதில் தெளிவில்லாமலும் முன்னுக்குப் பின் முரணகவும் பேசியிருப்பது விசித்திரமேயாகும், ஒருக்கால் டெல்லி தேவதைகள் ஏதாகிலும் கோபித்துக் கொள்ளுமோ என்ற ஐயப்பாடு இவரைப் பொறுத்த வரையில் இருக்கக் கூடுமென்று கருதுகிறோம். அவ்விதம் டெல்லி தேவதைகளின் தாக்குதலை சமாளிக்க முடியவில்லை யென்றால் சென்னை மேயர் நடத்திய விருந்தின் பெருமையை மட்டுமாகிலும் சொல்லி முற்றுப்புள்ளி வைத்திருக்கலாம்.

மைசூர் பிரதமர் அனுமந்தய்யா அவர்களோ மேயரின் யோசனையைக் குறித்து சுற்றி வளைத்துப் பேசியிருக்கிறார்! இந்தியாவில் வசிக்கும் அனைவருக்கும் தாங்கள் ஒரு நாட்டு மக்கள என்ற உணர்ச்சி வேண்டும், ஒரே ஆட்சியின் கீழ் வாழ்பவர்கள் என்ற எண்ணத்தை மறந்துவிடக் கூடாது என்று ஆரம்பித்து இறுதியாக சென்னை மேயர் தெரிவித்த் தட்சிணப் பிரதேசம் அமையுமானால் அதற்கும் தாம் குறுக்கே நிற்கப் போவதில்லை யென்று முடித்திருக்கிறார்,

டெல்லி ஆதிக்கம் தென்னாட்டினை புறக்கணிக்கிறது என்பதைப் பலமுறை வெளிப்படையாக அதுவும் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டங்களிலே நேரு பண்டிதரின் முன்னிலையிலேயே வன்மையாகக் கண்டித்துக் குற்றஞ் சாட்டிப் பேசிய அனுமந்தய்யா அவர்கள் இன்று மழுப்பலில் இறங்கும் இரகசியமும் என்ன என்பது விளங்கவில்லை. தமது முதலமைச்சர் பதவிக்கு தமது ராஜ்யத்திலுள்ள வடநாட்டு ஆதிக்க ஏஜெண்டுகளால் ஆபத்து ஏற்பட்டால் என்ன செய்வது என்ற அச்சத்தால் தமது விருந்துப் பேச்சின் முதற் கட்டத்தில் டெல்லி தேவதைகள் மனங்குளிர அர்ச்சித்தும் பிற்பகுதியில் தனது மனதிலுள்ள எண்ணத்தை மிக நாசுக்காக வெளியிட்டிருக்கக் கூடுமோ என்று கருதுகிறோம்.

ஆக சென்னை மேயர் சிதம்பரம் மைசூர் முதலமைச்சர் அனுமந்தய்யா ஆகியோரின் பேச்சுகள் எவ்வளவு மூடுமந்திரமா யிருப்பினும், பொதுவாக டெல்லி ஆதிக்கத்தால் தென்னாடு அவதியுற்று வருகிறதென்பது மட்டும் இருவர் பேச்சுகளிலிருந்தும் தெரியவருகிறது.

சென்னை மேயர் சிதம்பரம் அவர்கள் தமது விருந்துப் பேச்சில் எவ்வளவு

8–ம் பக்கம் பார்க்க

"திராவிடன்" ஆற்றிவரும் மகத்தான பணி

அன்புடைய ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம் பல,

திராவிடன் இதழ் கடந்த எட்டு ஆண்டுகளாக திராவிட சமுதாயத்திற்கும், திராவிட நாட்டின் சுதந்திரத்திற்கும், செய்துவரும் பணி மகத்தானது என்பதை நான் மட்டுமல்ல நம் நாடே கூறும். அரசியல் கருத்துக்களையும் திராவிட இனத்தின் பெருமையையும் திராவிடன் இதழில் படித்துப் புத்துணர்ச்சி பெற்றவன் நான் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். திராவிடர்களின் அன்புக்கும் பெருமைக்கும் உரித்தான திராவிடன் வார இதழில் வெளிவரும் தொடர் கட்டுரைகளும் திராவிடன் தொண்டுக்கு தனிச்சிறப்பாக விளங்குகிறது. திராவிடன் தனது 9-ம் ஆண்டுப் பணியில் மேலும் சிறப்புற்று விளங்க வேண்டுமென்று மனமார வாழ்த்துகின்றேன்.

இரா. அ. பழனிச்சாமி

இராசிபாளையம், கோவை.



12. ஏ. கே. வேலன்.

*

நாடக இலக்கியத்தின் பூரணப் பொலிவையும் தமிழ் நிலம் இன்னும் பெறவில்லை. தமிழகத்தின் வாழ்க்கையோ, பண்பாடோ கலந்ததொரு நாடகத்தின் கருவாக சமைந்து எல்லோரது போற்றுதலைப் பெறவில்லை. அந்தப் புகழ் நிலை தயாரிப்பிலேதான் வளருகிறது. நம்மிடையே இன்னாளில் ஆயிரமாயிரம் நாடகாசிரியர்கள் நாளும் தங்களின் சிருஷ்டிகளை காட்சி வடிவங்களாக சித்தரிக்கிறார்கள் எனினும் 'உயிர் சத்து' இழந்தவையே அத்தனையும்...!

மேலை நாட்டு நாடக வளர்ச்சியும், அதன் கலைவிரிவும் தினம், தினம், வளர்ந்து வருகின்றன. அந்த தன்மையில் தமிழ் நாடகத் துறை ஆரம்ப பள்ளி மாணவன் நிலையைத்தான் பெற்றிருக்கிறது. இருப்பவைகளில் குறிப்பிடத்தவை சில. அவைகளில் பெரும்பான்மையும், இரவல் படைப்புகள்......பத்தொன்பதாம் நூற்றாண்டு 'கூத்து மேடை' சீர்திருந்திய நிலையில் நீண்ட காலமாகவே இந்த பழுது தேங்கிக்கிடக்கிறது. அந்த எழிற்கலையின் மற்ற பகுதிகளை எப்போது படைத்துக் காட்டுவது? இயற்கைக்கு புறம்பான எண்ணங்களை நினைத்து நினைத்து நம்மவரின் கலைத்துறைகளில் கூட கற்பனை எல்லை மீறிச் சென்றுவிட்டது. சாமான்ய வாழ்க்கை உண்மைகளை எழுத சில நாடகாசிரியர்கள் மறந்து விடுகிறார்கள்!

தாய் இலக்கியம் வளர நமது சாதனைகள் செழிக்கவில்லை. திராவிடர் இயக்கம் தனக்கென கதாசிரியர்களை, கவிஞர்களை, நாவலர்களை பெற்றிருப்பது போல நாடகாசிரியரையும் உருவாக்கி அளித்திருக்கிறது. ஏ. கே. வேலன் தமது எழுத்தால் புகழ் ஒளி பரப்பாவிட்டாலும், அவரால் அந்தத் துறையும் இயக்கமும் புதிய மணம் பெறுகிறது என்பதை மறுப்பதற்கில்லை.

இன்னாளில் பெரும் புயல் வீசக் காரணமாயிருந்த 'ராமாயண' நாடகத்தின் தன்மை கொண்ட 'இராவணன்' என்ற நாடகத்தை வேலன் முன்னமே எழுதி வெளியிட்டிருக்கிறார். தேவையான விளம்பரமும், வாய்ப்புமற்றதினால் அந்த ஏடு இன்றும் இருளிலே கிடக்கிறது.

வேலனின் சிறந்த பண்பு என்னவென்றால் நாடகத்தின் அமைப்பு எதிலும் 'சுத்தமாக' காட்சியளிக்கும். போற்றுதற்குரிய தெளிவும் வனப்பும் எழுத்துக்களில் அடியோட்டமிடும். நல்ல பண்பு—நாடகாசிரியர் பெற்றிருக்க வேண்டிய பண்புகளில் தலையாயது இது. காட்சி அமைப்புகளில் கட்டுக் கோப்பு—கதையில் குழப்பமற்ற தன்மை—சொற்களின் எளிமையும் பொலிவும் ஆகியவற்றை வேலன் பெற்றிருக்கிறார் அவர் எழுதிய 'சாம்பாஜி'யில் இத்தனை எழிலும் நிரம்பியுள்ளன.

விக்தர் ஹூகோவின் 'ஏழைபடும் பாட்டை' தழுவி 'கைதி' எனும் தலைப்பில் வேலன் எழுதிய நாடகம் மற்றொரு சிறந்த படைப்பு. தழுவல் என்பதைத் தவிர முழுக்க முழுக்க தமிழகத்து சூழலையே ஆசிரியர் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். பாத்திரங்களும் அந்த அமைப்புள்ளவையே. இது வாழ்க்கை உண்மைகளின் பூரண பிரதிபலிப்பு இல்லை யென்றாலும் அங்கங்கே அதன் நிழல் தெரிகிறது.

ஆரம்ப காலத்தில் வேலன் எழுதிய 'சூருவளி' யில் பண்படாத தன்மைகள் நிறைந்திருந்தன. புதிய எழுத்தாளர்கள் வழக்கமாக சிருஷ்டிக்கும் உத்தம மனிதர்கள்' இதிலும் வந்து போயினர், பணக்காரர்களின் கொடுமைப் பண்பும், ஏழை பங்காளனின் நல்ல இதயமும் விகசிக்கப்பட்டன இதில் எனினும் சூருவளி சாதாரண நாடகம்தான்!

'ஐந்து இரவுகள்' சமீபத்தில் சிறு நூலாக வந்த முன்னுரையற்ற எழுத்தோவியம். கதையும் கட்டுரையுமில்லாத ஏதோ ஒரு 'அளப்பு'; ஆசிரியரின் பக்குவப்படாத எழுத்தறிவு எங்கெல்லாமோ பாய்ந்து இறுதியில் பரிதாபத்தோடு முற்றுப் பெறுகிறது.

'சரிந்த கோட்டை'யில் சுவையிருந்தாலும் அமைப்பில்லை; அழகுமில்லை. வழக்கமாக எல்லோரும் எழுதும் 'பார்ப்பனீய துரோகம்' தான் இதிலும் கரு. தஞ்சை வரலாறு திரும்ப திரும்ப சொல்லி அலுத்துப்போன சேதிதான் எனினும் இதன் பண்பு முறை புதியதாயிருந்தது, சில பகுதிகளில் காணப்படும் கவர்ச்சியான எழுத்து நடை இதனை இரண்டாந்தர இலக்கியமாக்கிவிடாமல் காப்பாற்றுகிறது!

இவையெல்லாம் வேலனின் நாடறிந்த எழுத்துச் சித்திரங்கள். வேலன் எதை எழுதினாலும் முறையாக — கோர்வையாக — பழுதின்றி எழுதுகிறார்.

முழுக்க முழுக்க நாடகங்களே தீட்டும் வேலன் நம்மவரிலே நல்ல நாடகாசிரியர் எனினும் தேவை...

12-ம் பக்கம்

ஒப்புதல்

இந்த வரிசையில் இது இறுதிக் கட்டுரை. வாழும் இலக்கிய கர்த்தாக்களை விமர்சனம் செய்வதில் வழக்கமாக வரும் தொல்லைகள் இந்த கட்டுரைகளின் இடையிடையே தோன்றியிருக்கின்றன. புகழ்ச்சிக்கோ, காய்தலுக்கோ வாரிசாகாமல் வெளிச்சம் நிரம்பிய இதயத்துடனேயே கட்டுரைகள் எழுதப்பட்டன. இந்த நிபந்தனைக்கோடு சில இடங்களில் விடுபட்டிருந்தால் எல்லைமீறிய ரசனை எனக் கொள்ளுங்கள்.

பூங்கொத்துகளின் மயக்கு மணம் இடையே துவண்டு விடுவதல்ல—அது முற்றுப் பெறாத தொடர் கதை...

குறிப்பிடத் தகுந்தோர்—தாயக இலக்கியத்தை ஒளிமயமாக்குவோர் எண்ணற்றவர்கள் இன்னும் உள்ளனர். அவ்வப்போது அவர்களைப்பற்றிய விளக்கக் கட்டுரைகள் எழுதப்பட வேண்டும்.

நமக்கெல்லாம் நல்லாசிரியராக விளங்கும் பன்மொழிப் புலவர் அப்பாத்துரை அவர்களால் தமிழ்பெற்ற பெருமை எண்ணி, எண்ணி பூரிக்கத்தக்கதல்லவா! அந்த விரிவான சிந்தனையில் விளைந்த விதவிதமான நல்முத்துக்கள் காவியம், கட்டுரைகள், நாடகங்கள், சிறுகதைகள், மொழிபெயர்ப்புகள், இலக்கிய நூற்கள்...பல்வேறு துறைகளின் சிறந்த ஏடுகளை அவரது வளமான எண்ணங்கள் தமிழகத்திற்கு தந்திருக்கின்றன.

இலக்கிய மாண்புகளை எழில்தழுவிட எழுதும் நாவலர் நெடுஞ்செழியன்—வைரத்தின் அடுக்கென கருத்துக்களை படைத்துக் காட்டும் பேராசிரியர் அன்பழகன்—உயர்ச்சத்து புரண்டோட புதிய, புதிய எண்ணங்களை தந்திடும் மதியழகன் இவர்களெல்லாம் வளர்கின்ற திராவிடர் இயக்கத்தின் விடிவெள்ளிகளல்லவா!

அரசியலில் இயக்கம் திரும்பியதும் அந்த துறைக்கென கட்டுரைகள் எழுதிட அரசியலை பழுதற கற்றோர் நம்மிடையே உருவாயினர். இதயத்தின் மொழியை அப்படியே பட்டை தீட்டாது தரும் சம்பத்—கொள்கை உணர்ச்சி பொங்கித் ததும்ப எழுதிடும் என். வி. நடராசன்—அடுக்குமொழியின் மேன்மையை சுவை வற்றாது அளிக்கும் மணிமொழியார்—இளஞ்செழியன்—கருத்திலே ஜீவப் பொலிவைத் தேக்கி எழுதும் மு. சண்முகம் ஆகியோரின் திருப்பெயர்கள் அரசியல் சரிதத்திலும், இலக்கிய வரலாற்றிலும் மறையாது ஒளிவிடுகின்றன.

இளம்பரம்பரையினரில் 'ரஷ்ய இலக்கியத்தை தந்த வாணனும், 'ரஷ்புடீன' உருவாக்கிய அரங்கண்ணலும் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

வாணனின் கதைகளில் மெருகு குலைந்திருந்தாலும் கட்டுரைகள் போற்றுதற்குரியன. இவர் புகழ் சொல்ல 'ரஷ்ய இலக்கியம்' ஒன்றே போதும்.

ஆரம்ப நாட்களில் 'திராவிட நாடு' இதழில் அரங்கண்ணல் தீட்டிய கட்டுரைகளின் இனிப்பு ஏனோ இப்போது இல்லை. அவர் எழுதிய 'ரோம்' அழகு நடை பெற்றிருந்தாலும் புதுமையாக எதுவுமில்லை. 'உடைந்த ஆசை' ஒரு பற்றுக்குறை...தொகுதியில் காணப்படும் 'உலகம் யாருக்கு?' என்ற சிறுகதை நல்ல படைப்பு.

புகழ் பெற்றவர்களின் 'எதிரொலி'யாக இருப்பது சிரமமல்ல—பிறர் நீலாம்புரி இசைத்தால் நாமும் அதைத்தான் ஒலிபரப்ப வேண்டுமென்பதில்லை, 'முகாரி'யையாவது பாடலாம். ஏனெனில் அது சொந்த முகாரியாயிருக்குமல்லவா!

'பொன்னி' தந்த காணிக்கைகளில் சிறந்த மாணிக்கமான வழிப்போக்கன் இதுவரை எவரும் தொட்டிராத துறையை தன்னந்தனியாக நிறைவு செய்கிறார். புரிந்து கொண்டவர்கள் இவரை 'தென்னகத்து கோல்ட்ஸ்மித்' என போற்றுகிறார்கள். விகடம் கலவையிடும் நடையில் இவர் எழுதிய கட்டுரைகள் தமிழுக்கே புதிய அழகைப் பெய்தன. நம்மவரின் பண்படாத அறிவால் இருளிலே உலவிடும் எண்ணற்ற மேதையருள் வழிப்போக்கனும் ஒருவர்.

கற்றவரும் வியக்கும் வகையில் புதிய கருத்துகளை—எங்கெங்கோ அமிழ்ந்திருந்த உண்மைகளை நல்ல தமிழில் வார்த்தளிக்கும் திராவிடப்பித்தனை நாம் புதிய செல்வமாகப் பெற்றிருக்கிறோம்.

இந்தக் கட்டுரைகளால் 'சாதனைகள்' என குறிப்பிடுமளவிற்கு எதுவுமே உருவாகிவிடவில்லை. இவை உள்ளத்தில் கனத்திருந்த சில உணர்ச்சிகளின் விளக்கங்கள்! 'ரசனை படைத்த உருவங்கள்' எனக் கொண்டாலும் தவறில்லை. விமர்சனப் புலவர்களின் எண்ணம் எதுவோ!

அரும்பு பருவத்திலே—வளர்கின்ற நிலையிலே—வருநாட்களை சொந்தமாக்கும் ஆர்வம் தேயாத எண்ணற்ற இளம் எழுத்தாளர்கள் உருவாகி வருகிறார்கள். அவர்களை இங்கு 'பிரச்னை'யாக்கவில்லை. தேவையற்ற கசப்பு வளரும்!

திறமை சாலிகளை போற்றி வாழும் நல்ல பண்பை தமிழகம் இனியாவது பெறவேண்டும்.

கேள்வி? பதில்.

— அஞ்சாநெஞ்சன் —

கே : பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் தமது மலேயா சுற்றுப்பயணத்தின் போது பேசுகையில் 'நானும் ராஜாஜி போன்ருரும் காங்கிரசை வளர்ப்பதற்கு, எங்களுக்கும் மற்றும் பல முக்கியஸ்தர்களுக்கும் சம்பளம் பொருளுதவி ஆகியவைகள் கொடுத்துதான் காங்கிரசை வளர்த்தார்கள்' என்று பெரியார் பேசியதாக மலேயா 'தமிழ் முரசு' என்ற பத்திரிகையில் செய்தி வெளிவந்திருக்கிறதே இது உண்மையாயிருக்குமா?

—கரு. இலக்குமணன்,
தேவகோட்டை

ப : தோழரே, சம்பளமாக பணம் கொடுக்கப் பட்டதில்லை, குறிப்பிட்ட சில காரியங்களுக்காக தனித்தனி குழுவை நியமித்து அவைகளைப் பெரியார், ஆச்சாரியார் போன்ற அந்நாளைய காங்கிரஸ் தலைவர்களிடம் ஒப்படைக்கப் பட்டிருந்ததாகவும், இவர்கள் முழுநேர ஊழியர்கள் சிலரை குறிப்பிட்ட காலத்துக்கு ஓரளவு ஊதியம் கொடுத்து நியமித்துக் கொண்டார்கள் என்பதே யான் அறிந்த வரையில் உண்மையாகும்.

*

கே : அஞ்சா நெஞ்சனே, திருந்திய திருமணம் என்ருல் என்ன— சீர்திருத்த திருமணம் என்ருல் என்ன?

பி. பி. நாராயணசாமி, பி கே. புதூர்

ப : மூடப்பழக்க வழக்கங்களிலிருந்து—ஆரிய மாயையில் மூழ்கியிருந்த அவல நிலையிலிருந்து திருந்தி—அல்லது சீர்திருந்தி, மறுமலர்ச்சி பெற்று நடத்தப்படும் நிகழ்ச்சிகளுக்கு நாம் அளித்து வரும் இப்பெயர்களில்தான் வித்தியாசமே யல்லாது திருந்திய திருமணம்—சீர்திருத்த திருமணம் ஆகியவற்றின் செயல்முறைகளில் வேறுபாடு ஒன்றும் இல்லை.

*

கே : 'ஆவடி அன்பர்கள்' பேசும் பேச்சு மேடையை எதற்கு ஒப்பிடலாம்?

இரா. அ. பழனிச்சாமி,
இராசிப்பாளையம்

ப : 'மாதிரி சோஷலிஸ'த்திற்கு ஒப்பிடலாம்.

*

கே : தி. மு. கழகம் மும்முனைப் போராட்டம் நடத்திய சமயத்தில் ஐந்தாறு சிறுவர்கள் ஆரம்பித்துள்ள போராட்டம் என்று அவசர சாமிகள் கூறினர்களே, இப்பொழுது அவர்கள் ஆரம்பித்த இந்தி எதிர்ப்புப் போராட்டம்பற்றி தங்களின் கருத்தென்ன?

—நெ. சொல்லாளன், பம்பாய்–17

ப : அவர்களின் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைக் குறித்து ஏற்கனவே தி. மு. கழகம் அபிப்ராயம் கூறியிருக்கிறது. எனவே அதைப்பற்றி மீண்டும் ஏதாகிலும் சொல்லுவதென்பது முறையாகாது. நிற்க அன்று தி. மு. க. போராட்டத்தைக் குறை கூறிய அவசர சாமிகள் இனியாகிலும் அறிவுடமை பெறட்டும் என்பதே நமது எண்ணமாகும்.

*

கே : கோவா தியாகிகளுக்கு அஞ்சல் செலுத்தும் முறையில் சென்னை சர்வகட்சி கூட்டத்தில் தி. மு. கழகம் கலந்து கொள்ளவில்லை, கூட்டத்தில் குழப்பம் விளைவிப்பதற்காகவே கலந்து கொண்டார்கள் என்று கம்யூனிஸ்ட் ஜீவா கூறுகிருரே, இதன உண்மை என்ன?

—இரா. அ. பழனிச்சாமி,
ராசிப்பாளையம்

ப : இந்திய கம்யூனிஸ்டுகளுக்கும் உண்மைக்கும் நெருங்கிய பகை யென்பதை கம்ப ராமாயண கம்யூனிஸ்டு ஜீவா உறுதிப்படுத்துகிருர் என்பதுதான் உண்மை! தோழர் ஜீவா போன்ற தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுகளின் போக்கை காலஞ் சென்ற கோயபல்ஸ் உயிரோடிருந்து பார்த்தால் பித்தலாட்டப் பிரச்சாரத்தில் தன்னையும் மிஞ்சக் கூடிய அளவுக்கு 'வளர்ந்துவிட்ட' இவர்களைக் கண்டு திகைத்துப் போயிருப்பார்.

*

கே : தென்னிந்தியா புறக்கணிக்கப்படவில்லை யென்று இப்போது அடிக்கடி ஜவகர்லால்நேருவும் மத்திய சர்க்கார் மந்திரிகளும் பேசுகிருர்களே ஏன்?

—டி. கே. சிவப்பிரகாசம், திருச்சி

ப : அந்த அளவுக்கு தென்னுடு டெல்லி தேவதைகளால் அரசியல் பொருளாதாரத் துறைகளில் சிரழிக்கப்பட்டு வருகிற தென்பதை வடநாட்டுத் தலைவர்களின் மனசாட்சியே இடித்துக் கூறிவருகிறது.

•

கே : அய்யா அஞ்சா நெஞ்சனே ஒரு கேள்வி கேட்கிறேன பளார் எனப் பதில் சொல்ல வேண்டும் தெரிகிறதா—கனம் காமராசருக்கு சனம் மந்திரி சுப்ரமண்யம் அடக்கமா அல்லது கனம் சுப்ரமண்யத்துக்கு கனம் காமராசர் அடக்கமா?

—எம். நெடுமாறன், கோவை

ப : தோழரே, உங்களுக்கு உங்கள் நாவடக்கமா அல்லது உங்களின் நாவிற்கு நீங்கள் அடக்கமா —அதை அன்பு கூர்ந்து தெரிவியுங்கள். பிறகு உங்களின் கேள்விக்கு விரிவாகப் பதில் கூறுகிறேன்.

'சட்டம் என்ன செய்யும்?'

"யாரடீ வெளியில்......"

"உங்கள் நாதன்......"

"அதாண்டி...யார்....இன்பபுரி ஜமீந்தாரா, ஆலை முதலாளி அய்யாசாமியா பணக்கார பலவேசமா? மாடி வீட்டு மகாலிங்கமா அல்லது ரௌடி......

"அது இல்லமா இவங்க மாதிரி இப்ப புதிசா 'அட்மிட்' ஆனுரே பக்தர் படைத் தளபதி பரந்தாமன்"

'ஓ அவரா......கூட்டிட்டு வா"

வராந்தாவில் பக்தர் படைத் தளபதி 'கண்ணனின் உன்னத லீலையை நினைத்தால் தன்னையே மறந்திடச் செய்யாதா" என்று முணு முணுத்துக் கொண்டிருந்தா. இதைக் கேட்ட செல்வம் கோபிகா லீலையை நினைத்தால் இந்த கோகுலத்தையேமறந்திடத் தான் செய்யும்...சரி, அம்மாவரச் சொன்னுங்க என்ருள் செல்லம் உள்ளே சென்ருன் பரந்தாமன்.

வாங்க வாங்க என்னுயிர்க் காதலரே வாருங்கள் உங்களைக் காணுமல் நான் கவலையைச்சுமந்து கொண்டிருந்தேன்' என் கவலையைப் போக்கிய கண்ணுளா உட்காருங்கள் என்ருள் நளினி.

என் மாருதி (குரங்கு) விலாஸ் மசால் தோசையே நலந்தானே.

ஆமாம் என் அல்வாவே...... இன்று ஒரு பத்திரிக்கை செய்தி பார்த்தீர்களா.

என்ன வதந்தியிலா?

ஆமாம்!

அது என்ன செய்தி கண்ணே?

அதாவது ஆண்களை வைப்பாட்டி வைக்க விடாமல் அரசியலார் சட்டம் கொண்டு வர வேண்டும் எனறு ஒருவர் பேசியிருக்கிருர்.

யார் எங்கள் கிருபானந்த வாரியாரா?

தொலைஞ்சுது போ...அவர் நல்லாப் பேசுவாரே...ஒரு கிருத்தவப்பாதிரியார் இவ்வாறு கோயில் பட்டியில் கூறி யிருக்கிருர்,

அதானேக் கேட்டேன். பாவம் அந்தப் பாதிரியாருக்கு 'பரமண்டலத்திலிருக்கும் எங்கள் பிதாவே' என்றுதான் கூறத்தெரியுமேயல்லாது எங்களது பக்தி ரசமும் பரம ரகசியமும் அவருக்கென்ன தெரியும்.

ஆமாம் நீங்கள் ஒரு பக்தர் படைத் தளபதியாக இருந்துங் கூட எங்களோட சகவாசம் வச்சிக்கலாமோ?

போடி பைத்தியம். உங்களவாள் மாதிரி கூட சகவாசம் செய்தால்தான் நாங்கள் சொர்க்கம் அடைய முடியும்!

என்ன?

ஏன். ஆச்சரியப்படாதே சொல்லுகிறேன் கேள்:

"வேஸ்யா தர்சனம் புண்யம், ஸ்ப(ஸம் பாபநாசம்
சும்பனம் சர்வதீர்த்தானம், மைது(னம் மோக்ஷசாதன்"

என்று மனுதர்ம சாத்திரத்திலே ஒரு ஸ்லோகமே ஏற்படுத்தியிருக்கிருர்களே பெரிவாள்.

சுலோகமா அவற்றின் பொருள் என்ன?

அதாவது உன்னைப் போன்றவர்களிடம் (!) சென்று தரிசிப்பதில் புண்ணியம்! தொட்டுத் தடவி கொஞ்சிக்குலவி ஸ்பரிசிப்பதில் தான் செய்த பாபங்கள் நாசமாகும். 'கெண்டையொத்த கண்ணுள் கிளிமொழி வாயினூறல்கண்டு சர்க்கரையோ, தேனே கனியோடு கலந்த பாலோ என்று எண்ணும்படியான உதட்டில் ஊறும் அமிர்தத்தை சுவைத்தால் கங்கை யமுனை போன்ற உலகிலுள்ள புண்ய நதிகளில் தீர்த்தமாடியதற்குச் சமமாகும். கூடுதலால் மோட்சலோக பிராப்தி கிடைக்கும் என்பதாகும்.

இவ்வளவு 'பிரிலெசென்ஸ்' இந்துமத சட்ட நூலாகிய மனுதர்மமே கொடுத்துள்ளதை அறியாமலல்லவா அந்தப் பாதிரி சட்டம் போடச் சொல்லுகிருர்,

அப்படியாசங்கதி—அப்போது உடனடியாக இதுபோன்ற எண்ணற்ற புராண இதிகாசங்களையல்லவா ஒழிக்க முதலில் சட்டம் போடவேண்டும் சர்க்கார்?

நளினி — நீ சுத்த அசடு. புராணங்களைத் தொலைக்க வேண்டுமென்று சுயமரியாதைக்காரன்கள் ஓயாமசத்தம்போடுரானுங்க. அதையே எதிர்க்கிரேம். எங்களவாள் இருக்குமட்டும் எந்த சட்டத்தால்தான் எங்களை என்ன செய்ய முடியும். சரி... வெட்டிப் பேச்சு ஏன்? நம்ம காரியத்துக்குச் செல்வோம் வா என் வனிதா மணியே!

அட சே! சும்மா யிருமய்யா. மனு சொன்னுராம்! அதை இந்த மண்ணுங்கட்டி விவரிக்கிருராம்! ஆளைப்பாரு!

விட்டல்புரம் பி. சுப்பையா

அறிவிப்பு

•

என் பெயரில் "அருள் நெறி" என்ற புத்தகத்தை மதுரை 'அறிவுப் பண்ணை' என்ற பதிப்பகத்தார் வெளியிட்டிருக்கிருர்கள். அப்படிப்பட்ட பெயரில் அப்படிப்பட்ட புத்தகத்தை வெளியிட நான் யாருக்கும் அனுமதியோ, உரிமையோ அளிக்கவில்லை. என்னுடைய கருத்துக்கள் என்று அப்புத்தகத்தில் தப்புந் தவறுமாகவும், தாறுமாருகவும், இல்லாதும் பொல்லாதுமாகவும், மாற்றியும் திருத்தியும் என் சொற்பொழிவுகளை வெளியிட்டிருக்கிருர்கள்.

பொய்யையும், திருட்டையும் வாழ்க்கைக்கான வசதியாக வைத்துக் கொண்டு இழிதொழில் நடத்தும் தமிழகத்தின் அவமானச் சின்னங்களாக இருக்கும் அவர்கள், என் பெயரில், என்னைக் கேட்காமல் புத்தகம் வெளியிட்டிருக்கிருர்கள். அவர்கள்மீது வழக்கு தொடுப்பதற்கான முயற்சி எடுக்கப் பட்டிருக்கிறது. நேர்மையான விற்பனையாளர்களும், பொதுமக்களும் அவர்தம் இழிச்செயலுக்கு ஆதரவு தரவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்,
இரா. நெடுஞ்செழியன்



பாலைவன ரோஜா!

4

காட்சி : 7

இடம் : வள்ளியின் வீடு.

நிலைமை : [வீட்டின் பின்பகுதியிலுள்ள பூந்தோட்டத்திலே தோகை விரித்ததுபோல சல்லாத் துணி பறக்க வள்ளி அழகான நாட்டியமொன்றை ஆடிகாட்டிவிட்டு ....பலவேசத்தின் பக்கத்திலே வந்து அமருகிருள்]

பல: ஆட்டத்தை நிறுத்திவிட்டாய்...ஆனாலும் என் நெஞ்சிலே ஆடுகிருயே இன்னும் ஓயாமல்! வள்ளி கானகத்து மயிலே! கால்கள் கனத்துப் போயிருக்கும்.

[கால்களிலே கட்டியிருக்கும் சதங்கைக் கொத்தை அவிழ்க்கிருள் வள்ளி! மற்ருெரு காலிலே யிருக்கும் சதங்கைகளைப் பலவேசம் அவிழ்க்கத் துவங்குகிருன்]

பல: நான் இந்தச் சதங்கைகளாக இருந்தாலாவது உன் கால்களோடு கொஞ்சிப் பேசுவேனே!

[அவிழ்க்க வந்த அவனது கரங்களைத் தடுத்துக் கொண்டே]

வள்: அய்யோ! சே...இதென்னுங்க......வெட்கமா யிருக்குது காலை விட்டுடுங்க.

பல: ஆடிய பாதத்தைத் தொட நான் என்ன தவம் செய்தேனே? பரமனும் பிரம்மனும்......தலையிலும், நாவிலும் தங்களின் இதய ராணியைத் தாங்கும்போது...?

வள் : பல்லவி பாடி பல்லக்குத் தூக்குகிறஇந்தவழக்கமேஎனக்கு பிடிக்காது. அன்புக்கு இதுதானு அடையாளம். நிலா தலை தூக்கும் போது அடிமைபுத்தி! கதிரவன் காயும் போது ஆக்ரமிப்பு எண்ணங்கள்! நல்ல நடிப்பு! மிஸ்டர் பலவேசம் வெறும் வேஷம் மட்டும் 'வாழ்க்கை'யாகி விட முடியாது.

பல : வள்ளி! நீ எதையோ நினைத்துக் கொண்டு எங்கோ இழுத்துப்பேசுகிருய். இறைதேடி அலுத்து வரும் புருவைக் கூட கூட்டிலே யிருக்கும் குஞ்சுகள் அணைத்துத் தடவிக் கொடுத்து மகிழ்கின்றனவே...என் இன்பம் இப்போது ஆடிஆடி மகிழ வைத்தது. நான் மகிழ்ந்தேன்...உன்னையும் மகிழ வைக்க நினைத்துத் தான்....

வள் : பாத பூஜை செய்திராக்கும்!

பல : என் உள்ளக் கோயிலிலே நீ ஒரு அன்புத் தெய்வம் தானே!

வள் : எந்தத் தெய்வமுமே காணிக்கையில்லாமல் பூஜையை ஏற்றுக்கொள்வதில்லைதெரியுமா?

பல : காணிக்கை கேட்கிருயா? ...என் கண்களைக் கூடத் தந்து விடுவேனே—நீ கேட்டால்!

வள்: கண்ணப்பநாயனுரென்ற நினைப்போ?

பல: பொன் வேண்டுமென்ருலும் குவித்து வைக்கிறேன் மலைபோல...பொறுத்துக்கொள் இன்னும் சில நாளைக்கு!

வள்· நான் பொறுத்துக் கொள்வேன். ஆனல் என் ஆசைகள்—துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கின்றனவே! நேற்று நிலா நேரத்தில்தானே கூறினீர்கள்...இந்த மயில் கழுத்துக்கு 'மரகத மாலை' வாங்கித் தருகிறேனென்று. பூக்

மா. தங்கவேலர்.

காட்டுக்கே நீங்கள்தான் ராஜா! ஆனல் என் ராஜாவுக்கு கேவலம் மரகத மாலை வாங்கக்கூட மனமில்லை. இப்போது ஆடிக் காட்டினேனே இதே நாட்டியத்தை சிங்கப்பூரிலே ஆடியபோது முன் வரிசையிலே யிருந்து ரசித்த ஒரு சீமான் ஆட்டம் முடிந்ததும் அவர் கையிலிருந்த உயர்தர 'காமிரா'வையே பரிசாகத் தந்து விட்டுப்போனுர். நேற்று ஆல்பத்திலே என் நாட்டிய 'போஸ்'களைக் காட்டினேனே ... அவ்வளவும் அந்தச் சீமானே நான் ஆடியபோது இந்தக் காமிராவிலே எடுத்ததுதான்.

[பேசிக் கொண்டே அறைக்குள்ளே போய் 'காமிராவை எடுத்து வருகிருள்]

பல; வள்ளி! இதுவரை காமிராவை என்னிடம் காட்டவேயில்லையே! அவ்வளவு உயர்தரமானதா இது. நானும் நாலு படங்களை எடுத்துவிட்டு உன்னிடமே தந்து விடுகிறேன்......அதுவரை......

வள். தாராளமாக உங்களிடமே இருக்கட்டும். நான் விரும்பியதைத்தான் உங்களால் தர முடியவில்லை...நானும் அப்படியா நடந்து கொள்வேன்?

[காமிராவைக் கொடுத்தாள் வள்ளி, கரத்தையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டான் பலவேசம். நெளிந்து வளையும் வள்ளியின் நெற்றியைத் தடவி சூடேற்றிவிட்டு காமிராவை அணைத்துக் கொண்டே பலவேசம் நகர்ந்தான். செவ்விதழின் ஓரத்தைக் கடித்துக் கொண்டே கர்வத்தோடு அலட்சியம் காட்டி நிற்கிருள் வள்ளி]

காட்சி : 8

இடம் : ஆற்ருேரம்.

நிலைமை [காதலிக்காகக் காத்திருக்கும் மூர்த்தி கால் கடுக்க ஆற்று மணலிலே உலவிக் கொண்டிருக்கிருன். தேய்ந்த நிலா தன் நீண்ட முகத்தைக் காட்டிச் சிரித்துக் கொண்டிருந்தது!]

மூர் :- இன்று மூன்ரும் நாள்! காத்திருக்கிறேன்....... காணவில்லையே புது மயிலை!

(தூரத்திலிருந்து தெளிவாக ஒலித்துக்கொண்டிருந்த 'காதல் வாழ்விலே என்ற பாடலை உற்றுக்கேட்கிருன் மூர்த்தி.)

காதல் வாழ்விலே புயல் புகுந்துதான் திருமாமே! பாடுகிருனே யாரோ ஒரு நாடோடி! தென்றல் உலவும் வேளையிலே........இந்தத் தேளும் கொட்டுகிறதே என்னை! ராஜம்! என் அழகு ரோஜாவே... மெல்லிய உனது இதழ்களை நான் தொடுவதற்கும் முன்னதாக நீ என்னை முள்ளால் குத்தித்தான் ஆக வேண்டுமா? காலக்கோப்பை எனக்கெனத் தாங்கி வந்த கனி ரசமே! நினைவு போதையூட்டுகிறதே! வேதனையைச் சுமந்து கொண்டே இந்த மணற் குவியலிலே அலைந்து திரியவைத்து விட்டாயே!

கடிதம் — கட்டுப்பாட்டைத் தந்து விட்டதா உனக்கு! வஞ்சகர்களின் நஞ்சு எண்ணங்கள் பைங்கிளிக்கு வேதனைக் கூண்டாகிவிட்டதே! காதல் விளக்கைக் காஃக் காற்று அணைத்து விடுமா? ஆற்றின் ஆனந்த கீதமே நெஞ்சை அறுக்கிறது! நிலவு ஈட்டியைப் பாய்ச்சுகிறது! தென்றல் என்னைப் பைத்தியமாக்குகிறது, தனியனுக்கித் தவிக்க வைக்கிருயே இன்றும்!...அழகு வீணை அங்கே மீட்டுபவன் இங்கே!

காட்சி—9

இடம்...திகம்பரர் மாளிகை மாடி

நிலைமை: [ஆற்ருேரத்தில் மனப் புயலோடு காதலன் மூர்த்தி அலைந்து கொண்டிருந்த அதே நேரத்தில்......

அறையின் விளக்குகளெல்லாம் அணைக்கப் பட்டிருந்தன. எரிந்து கொண்டிருந்த மெழுகு வர்த்தியின் துணையால் கடிதத்தை எழுதி முடித்து...பெருமூச்சோடு படிக்கத் துவங்குகிருள் ராஜம்!

(படிக்கும்—கடிதம்.)

ராஜம்: அன்புள்ள அத்தான்!

மூன்று இரவுகளும் கசந்துதான் போயிருக்கும் உங்களுக்கும் எனக்கும் அப்படித்தான்.

காத்திருந்து, காத்திருந்து, வீடு திரும்பியிருப்பீர்கள் மலர்ச்சோலையைச்சுற்றி முள் வேலி...அதுவும் ஒரு வகைப் பாதுகாப்புக்குத் தானே! எப்படியும் நாளை நிலா நேரத்தில் சந்திக்கிறேன்...கடிதத்தில் சொல்ல முடியாததை நேரில் கூறிவிடுகிறேன், பின்னர் நல்ல முடிவுப்படி நடப்போம். பதில் கடிதம் வேண்டாம். நிலா நேரத்தில் நினைவாக வந்தால் போதும்.

— பூக்காடு —

[கடிதத்தைப் படித்துவிட்டு மடித்துக் கொண்டே கடிகாரத்தைப் பார்க்கிருள் ராஜம். 12 மணி அடித்து ஓய்கிறது அந்தக் கடிகாரம்]

காட்சி : 10

இடம்: கோயிலின் பின்புறம்.

நிலைமை: [மாலை நேரத்து மஞ்சள் வெய்யில் கோபுரக் கலசத்துக்குத் தங்க முலாம்பூசி வைத்தது. பலவேசத்தின் கரத்திலிருந்த காமிராவை வாங்கி அழகு பார்த்துக்கொண்டே...]

வீரன்: பலவேசம்! வள்ளிஇதை என் கண்ணில் காட்டவே பயந்தாளே இப்போது உன் கையிலேயே கொடுத்து விட்டாளே! பலவேசம் வேடிக்கைக்குச் சொல்லலே உன்மேலே உயிரை வச்சிருக்கு வள்ளி!

பல: ஆமப்பா உயிரைத்தான் வச்சிருக்கா, நான் பெருமூச்சு விட்டா அவளுக்கு மூச்சே நின்னு போகுது. இந்த வைரக் கட்டியை விட்டுட்டு ... மண்ணுங்கட்டியை கட்டிக்கிட்டு அழச் சொல்றீயே!

வீர: சபலத்துக்கு ஆளாகிவிடாதே பலவேசம், வள்ளி...... வண்ணப்புருயில்ல பறந்தோடிப் போறதுக்கு. இதோ இந்தக் கல்லாலடிச்ச மதுரைவீரனைப்போல அவள் இருக்கிற இடத்திலே நிலையாத்தானிருப்பா! நீ குஷியாயிருக்கணும்னு குசேலனு யிருந்தா முடியுமா? அதுக்குத்தான் குபேர சம்பத்துக்கு வலை வீசுன்னு சொல்றேன், மூர்த்தி காரியத்திலேயே கண்ணுங் கருத்துமா யிருக்கான். அவனுக்கு விட்டுக் கொடுத்துட்டேனு குடும்ப மானமும்—நம்ம பாதத்தைத் தேடி விழுகிற பணமும் போயிடும் பலவேசம் நேற்று ராத்திரிகூட ஆற்ருேரத்திலே...

பல: அந்த இருவரையும் பார்த்தாயா?

வீர: ஜோடிப் புருக்களைப் பார்க்கலே பலவேசம். ஆண் புருதான் ஆவேசமாக அலைந்து திரிஞ்சது.

ப: அந்தப் பெண்ணழகி வரவில்லையா வீரா?

வீர: கடித பயம்...அதற்குள்ளாக நெஞ்சைவிட்டு மறைந்திருக்காதே!

பல: வீரா இன்னொரு திட்டமிட்டிருக்கிறேன். வெறும் கடிதத்தால் மட்டும் நமக்குச் சாதகத்தை உண்டாக்கிக் கொள்ள முடியாது. கடிதத்தின் மூலமாக முழுக்க, முழுக்கத் திகம்டரரைத் தான் விரட்டியடிக்க முடியும் நம்மால். ஆனல்...ராஜம்—மூர்த்தியின் காதல் மலரைக் கசக்கினுல்

8-ம் பக்கம்

ஏஜெண்டு தோழர்களுக்கு அறிவிப்பு

வணக்கம், ஆகஸ்டு முடிய நிலுவைத் தொகையை இதுவரை அனுப்பாதவர்கள் 12—9—55-க்குள் கண்டிப்பாக அனுப்பி வைக்குமாறு தெரிவித்துக் கொள்கிறோம்.

—நிர்வாகி, திராவிடன்

திராவிடன்

சென்னை : 9—9—55 : வெள்ளி

"தெளிவில்லாத நெஞ்சங்கள்"

போர்ச்சுகீசிய ஆதிக்கத்திலிருந்து கோவா பகுதியை எவ்வகையில் மீட்பது, அதற்கான நடவடிக்கைகள் எவையெவை யென்பதைப்பற்றி நேரு பண்டிதரைப் பிரதமராகக் கொண்ட இந்தியப் பேரரசு இரண்டாண்டுகளுக்கு முன் ஒரு முறையை வகுத்துக் கொண்டிருந்தது. அந்தத் திட்டப்படி ஒரு துளி ரத்தமும் சிந்தாமல் அதாவது போராட்டமின்றியே கோவாவை விடுவிப்பதென்பது இந்திய சர்க்காரின் எண்ணம் என்பதாகத் தெரிவித்திருந்தனர்,

இந்திய அரசியலாரின் இம்முடிவுக்கு மாருக கோவாவில் அறப்போர் நடத்தத் துணிவுகொண்டு இந்திய எல்லையை விட்டு காலடி எடுத்து வைத்தவர்களை நேரு சர்க்கார் தடுத்து நிறுத்தியதும் சிலருக்குத் தண்டனைகூட விதித்ததும் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

இந்தியப் பேரரசின் இப்போக்கினை ஆதரிக்காத மாற்றுக் கட்சியினரும் ஏன் சில காங்கிரஸ்காரர்களும்கூட வெளிப்படையாக கண்டிக்கவும், டெல்லிப் பாராளுமன்றத்தில் இதைப்பற்றிய அபிப்ராயத்தை வலியுறுத்தவும் செய்தனர்.

கோவா பிரச்னையில் தாங்கள் எடுத்த முடிவு அறிவுடைமையும் அகில உலக நாடுகளின் அரசியல் விவகாரங்களுக்கு ஏற்றதானது என்ற தெளிவான உறுதியும் இந்தியப் பேரரசுக்கு இருந்திருக்குமானல் கோவா போராட்ட கிளர்ச்சி சம்பந்தமாக நடைபெற்ற "அறப் போராட்டம்" அதற்கு ஆதரவான நடவடிக்கைகள் அனைத்தையும் தடுத்திருக்க வேண்டும்.

ஆனல் இந்திய அரசியலார் செய்ததென்ன? தங்களின் முன்னைய முடிவை மாற்றிக் கொண்டு கோவா போராட்ட அறப்போர் வீரர்களுக்கு "ஆசி" கூறினர் நேரு பண்டிதர் !

எனவே இந்தியப் பேரரசின் முதல்வரான நேரு பண்டிதரின் இந்தப் போக்குதான் கோவா அறப்போராட்டத்தில் நேரடியாகக் கலந்து கொண்டவர்களுக்கும், ஆதரவு தந்த ஏனையோருக்கும் உற்சாகமளித்தது மட்டுமல்லாமல் அவர்களின் எண்ணத்தை மேலும் தூண்டவும் செய்தது.

கோவா போராட்டத்தில் இந்தியப் பேரரசு கையாளும் முறை சரியல்லவென்று நாட்டிலே ஏற்பட்ட கண்டனத்துக்காக தனது சர்க்கார் கொண்டுள்ள எண்ணத்தைப்பற்றிச் சிறிதும் சிந்திக்காமல் திடீரென தமது குரலை மாற்றிப் பேசிவிட்டார் நேரு.

அதன் காரணமாக ஆகஸ்டு 15-ம் நாளிலிருந்து கோவா எல்லையில் நடைபெற்றுவரும் அறப் போராட்டத்தில் சிலர் உயிரிழந்தும் பலர் படுகாயமுற்றும் இன்றும் போர்ச்சுக்கீசிய சர்க்காரின் அடக்குமுறை வெறிக்கு ஏராளமானவர்கள் ஆளாகவுமான அநீதிகள் தலைவிரித்தாடத் தொடங்கியுள்ள விவரங்களையும் வாசகர்கள் அறிந்ததேயாகும்.

இந்திய எல்லையை விட்டுத் தாண்டும் அறப்போராட்ட வீரர்களுக்கு அனுமதி கொடுத்த இந்திய சர்க்கார் அதுபோலவே தங்களின் முன்னைய முடிவையும் உடனே மாற்றிக் கொண்டிருக்க வேண்டும். அல்லது அறப் போராட்ட வீரர்களையாவது எல்லையை விட்டுத் தாண்ட அனுமதியாதிருக்க வேண்டும்.

இந்திய சர்க்கார்அரசியல் யூகத்துடன் திட்டவட்டமாக நடந்திருந்தால் கோவா போராட்டத்தில் இந்திய மக்களில் சிலர் உயிரிழந்திருக்க வேண்டியகொடுமைக்கு இடமேற்பட்டிருக்காது. இவ்வித அறிவுரையைத்தான், போர்ச்சுகீசிய ஏகாதிபத்தியத்தின் மண்ணுசையை எதிர்க்கும் திராவிட முன்னேற்றக் கழகமும் நினைவூட்டி வந்திருக்கிறது.

எனினும் காங்கிரஸ் தலைவர்களில் சிலர் ஆகா—எமது நேரு மகா மேருவாயிற்றே அவருக்குத் தெரியாத அரசியலா? நேருஜி கூறுவதைப்போல கண்ணை மூடிக்கொண்டு பின்னலேயே போகவேண்டுமேயல்லாது ஒன்றும் பேசக்கூடாது என்று கூப்பாடு போட்டனர்.

ஆனல் சென்ற வாரம் நடைபெற்ற அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் "கோவா பகுதியில் தனிப்பட்ட முறையிலோ அல்லது கூட்டாகவோ சேர்ந்து கொண்டு இந்திய மக்கள் அறப்போர் நடத்துதல் கூடாது" என்று முடிவு செய்திருக்கின்றனர். இக்கூட்டத்தில் நேரு பண்டிதர் அவர்களும் இக்கருத்தை ஆதரித்துப் பேசியிருப்பதாகவும் பத்திரிகை செய்திகள் கூறுகின்றன. இன்னும் சொல்லப்போனல் இந்திய எல்லையை சர்க்கார் மூடிவிடப் போவதாகவும் அறிவித்திருக்கின்றனர்.

ஆகவே கோவா பிரச்சினையில் இந்திய அரசியலார் மீண்டும் தங்களின் முன்னைய முடிவைத் தேடி ஓடுகின்றனர்! இதற்குக் காரணம் என்ன?

கோவா போராட்ட முறையைப்போல காஷ்மீர் பிரச்சினையிலும் ஏதாகிலும் சம்பவங்கள் நடைபெற்ருல் என்ன செய்வது என்பதும், தனக்கு அகில உலக அரசியல் அரங்கில் இருப்பதாகக் கருதப்படும் சமாதானத் தூதுவர் என்ற புகழ் மங்கிவிடுமோ என்பதும்தான் இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர், கோவா பிரச்சினையில் இவ்வாறு தெளிவில்லாமல் நடந்து வருவதற்குக் காரணமாயிருக்கக் கூடுமோ என்று ஐயுறுகிறோம்.

நிற்க, தங்களின் இத் தடுமாற்றத்திலிருந்து ஓரளவு தெளிவு பெற்றிருப்பதாகக் காட்டிக் கொண்டுள்ள இந்திய அரசியலாரும், குறிப்பாக இந்தியப் பிரதமர் நேரு பண்டிதரும் கோவாவை மீட்க இனி என்ன செய்யப் போகிருர்கள் என்பதே கேள்வி?

உள்நாட்டு அமைச்சர் பந்த் பண்டிதர் பத்து தினங்களுக்கு முன் ஐதராபாத்தில் பேசுகையில் என்றைக்காகிலும் ஒரு நாள் கோவா இந்தியாவைச் சேர்ந்தே தீரும் என்று குறிப்பிட்டாரே அந்த வேதாந்தத்தை இன்னும் சற்று உரத்த குரலில் எழுப்பப் போகின்றனரா அல்லது ஐ. நா. சபை மூலமோ, அரசியல் யூகத்துடனே உடனடியாக ஆவன செய்யப் போகின்றனரா என்பதே ஏகாதிபத்யங்களின் ஆதிக்கங்களை (சுண்டக்காய் அளவாயினும் பூசணிக்காய் அளவுடையதாயினும்)எதிர்க்கும் அனைவரின் ஒருமித்த கேள்வியாகும். போர்ச்சுகீசிய ஏகாதிபத்திய ஆதிக்கத்தைத் தகர்த்தெறிய இந்தியத் துணைக் கண்டத்தில் எந்தக் கட்சியினரும் ஒருவருக்கொருவர் பின்வாங்கியவர்கள் அல்ல என்பது நாடறிந்த உண்மையாகிவிட்டது.

அத்தகு சிறப்பு மாற்றுக் கட்சியினர்களுக்கும் உரித்தாகிவிடுமே என்பதற்காக, அதிகார பீடத்தின் உச்சியில் அமர்ந்திருப்போரும் அவர்களுக்குத் துதிபாடித் திரியும் சில தேசியத் தலைவர்களும் பலபட்டரை எண்ணங் கொண்டவர்களாய்த் தங்களின் மூளையைக் குழப்பிக் கொண்டு கோவா பிரச்னையைப் பாழாக்காமல் அரசியல் தெளிவுள்ளவர்களாய் நின்று ஆவன செய்யுமாறு அறிவுறுத்துகிறோம்.

கட்டாய இந்தியை தென்னுட்டவர் மீது திணிக்காதே!

வட ஆற்காடு மாவட்ட ஆட்சி மன்றத்தின் எதிர்ப்பு.

வடஆற்காகாடு மாவட்டஆட்சி மன்றக் கூட்டம் அதன் தலைவர் டி. பி. கேசவ ரெட்டியார் தலைமையில் 4—9—55 அன்று நடைபெற்றது. 51 உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

தோழர் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி கூட்ட ஆரம்பத்தில் கோவா அடக்கு முறையைக் கண்டித்து ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். தீர்மானத்தை ஏகமனதாகநிறைவேற்றி கூட்ட நடவடிக்கை 5-நிமிடம் கழித்து நடைபெற்றது.

அடுத்து தோழர் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி கீழ்க்கண்ட தீர்மானம் கொண்டு வந்தார் இதை தோழர் ஐ. வி. எம். வீரராகவரெட்டியார் (காங்கிரஸ்) ஆதரித்தார். தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

தீர்மான விவரம் :—

" தமிழே தாய் மொழியாகக் கொண்டு உயிராகக் கொண்டு பெரும்பாலான தமிழர்கள் வாழும் சென்னை மாகாணத்தில் தமிழ் மொழியே சரிவர தெரிந்து கொள்ளாத மக்கள் நிறைந்திருக்கும் போது தமிழ் நாட்டில் கட்டாய இந்தியை புகுத்த வேண்டும் என்ற திட்டத்தை சென்னை சர்க்காரும் மத்திய சர்க்காரும் உடனடியாக 'வாபஸ்' வாங்க வேண்டுமென்று இந்த போர்டு தீர்மானிக்கிறது."

அடுத்த வாரம்

7-9-55-ம் நாளன்று நடைபெற்ற சட்டக் கல்லூரி தமிழ் மன்றத் துவக்க விழாவின் விவரமும், அவ்விழாவில் கலந்து கொண்ட அறிஞர் அண்ணு, நாரண துரைக்கண்ணன் ஆகியோரின் சொற்பொழிவுகளும், மற்றும் கூத்தரசன் மடல், பஞ்சாபில் மூன்றும் நாள் கட்டுரையின் முக்கிய பகுதிகள் ஆகியவை 16-9-55 திராவிடன் இதழில் வெளிவரும்.

—ஆ. ர்.

செப்டம்பர். 17 - 23. நாட்டுப் பிரிவினை வாரம் — தி. மு. கழக ஏழாவது ஆண்டுவிழா கொண்டாடுவீராக.

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

திராவிட நாட்டுக் கல்வி வரலாறு

திராவிடப் பித்தன்

28

1881லிருந்து 1894வரை

●

1882 பிப்ரவரியில் இந்திய சர்க்காரால் கல்விக் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டது. இக்கமிஷன் வைஸ்ராய் லார்ட் ரிப்பன் அவர்களால் நியமிக்கப்பட்டதாகும். வைசிராய் எக்சிக்யூடிவ் கவுன்சில மெம்பராக இருந்த சர். வில்லியம் ஹண்டர் என்பார் இக்கமிஷனுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். ஆகவே இது ஹண்டர் கமிஷன் என வழங்கப்பட்டது. 1854-ம் ஆண்டு வுட்ஸ் அறிக்கையின்படி கல்வி அபிவிருத்தி எப்படியுள்ளது என்பதை கண்டறிந்து கூறுவதற்கும் மக்கட் கல்வி பரவுவதற்கான வழிவகைகளைக் கூறுவதற்கும் இக்கமிஷன் நியமிக்கப்பட்டது கமிட்டியினர் துவக்கக் கல்வியைப்பற்றி தங்கள் கருத்தைக் கூறியுள்ளவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்.

துவக்கக் கல்வியை இன்னும் விரிவான வகையில் நடத்துதற்கு முன்வருதல் வேண்டும் மாகாண சர்க்கார்கள் இதற்கான சட்டங்களை பிறப்பிப்பதற்கும் மாகாண சர்க்கார்கள் முன்வருதல் வேண்டும்.

நாட்டு முறைப்படி நடந்துவரும் நாட்டுப் பள்ளிகட்கு விரிந்த முறையில் உதவியளிப்பதை சர்க்கார் மேற்கொள்ள வேண்டும்.

சமுதாயத்தின் அடித்தளத்தில் கிடக்கும் மக்களுக்கான துவக்கப் பள்ளிகளை துவக்குவதில் சர்க்கார் அதிக கவனம் செலுத்த வேண்டும். இவர்களுக்காக புதியப் பள்ளிகள் துவங்க முன்வருவதற்கு விசேஷ உதவி அளித்து ஊக்கமளிக்க வேண்டும். ஓரளவுக்கு இவ்வேழை எளியவர்கட்கு இலவசக் கல்வி புகட்ட வேண்டியதும் அவசர அவசியமாகும்.

சர்க்காரால் நடத்தப்படும் துவக்கப் பள்ளிகளிலும், சர்க்கார் உதவி பெற்று நடந்துவரும் பள்ளிகளிலும் எல்லாசாதி மக்களும் சேர்ந்து படிப்பதற்கான தடைகள் ஏதும் இருத்தல் கூடாது. இதை சர்க்கார் கவனமாக கடைப்பிடித்து வருதல் வேண்டும்.

துவக்கக் கல்வி அபிவிருத்தியை தனது கல்வி திட்டத்தின் முக்கிய அம்சமாக சர்க்கார் மதித்து காரியமாற்ற வேண்டும் மற்றவைகளைவிட இவ்வாரம்பக் கல்விக்கே அதிகப் பணம் செலவழிக்க வேண்டும்.

முனிசிபாலிட்டிகளும், லோகல்போர்டுகளும் துவக்கக் கல்விக்கே முக்கியத்துவம் கொடுத்து மக்களின் கல்வி அறிவை வளர்க்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.

இப்படிப்பட்டக் கருத்துக்களை வெளியிட்ட கல்வி கமிஷன், உயர்தரக் கல்வி கல்லூரிக் கல்வி ஆகியவைகள் பற்றியும் இன்னும் சில விசேஷ கல்விகளைப் பற்றியும் தனது கருத்தைத் தெரிவிக்க தவறவில்லை, கமிஷனது முடிவுகளை இந்திய சர்க்கார் ஆதரித்தனர். அவைகளை அமுலாக்கினர்.

சென்னை மாகாணத்தில் கமிஷனது தீர்மானங்களை நிறைவேற்றும் பொறுப்பு மிஸ்டர் எச். பி கிரிக் என்பாரிடம் சேர்ந்தது. 1880-ம் ஆண்டு ஜூலையில் இவர் சென்னை கல்வி இலாக்கா டைரக்டராக பதவி ஏற்றார், 1892 ம் ஆண்டு வரையில் இந்தப்பதவியிலிருந்தார். இவருடைய பன்னிரண்டு ஆண்டுகள் அதிகார காலத்தில் சென்னை மாகாணக் கல்வி அபிவிருத்தி உயர்ந்தது. துவக்கப் பள்ளிகளும், உயர்தரப் பள்ளிகளும், கல்லூரிகளும் பலப்பலப் பெருகின. குறிப்பாகக் கூறின் இந்தக் காலத்தில்தான் உயர்தரப் பள்ளிகளும் கல்லூரிகளும் மிகமிக அதிக அளவில் துவங்கப்பட்டன. கல்விக்கமிஷன் செய்திருந்த சிபாரிசுகளில் தனிப்பட்டவர்கள் கல்விச்சாலைகள். துவங்குவதற்கு சாதகமான சிபாரிசுகள் இருந்ததே இம்முன்னேற்றத்திற்குக் காரணம் எனலாம், அல்லாமலும் இந்தக் காலத்தில் தேசிய உணர்ச்சி வளர்ந்து சுதந்திரத் தாகம் மேலிட்டிருந்ததும் இச்சுதந்திர உணர்வால் தேசியப் பள்ளிகள் துவங்கும் ஆர்வம் மிக்கிருந்ததும் மற்றொரு காரணமாகும். இந்திய தேசிய காங்கிரஸ் நிறுவப்பட்டு இந்திய நாட்டின் நாலு பக்கங்களிலும் நாட்டு சுதந்திரப் பேச்சு தலை தூக்கி நின்றது)

அரசாங்கப் பதவிகளில் தங்கட்கும் உரிமை உண்டு என்ற அரசியல் உரிமையை எழுப்பியும் அதற்கான தகுதியை அடைவதற்கான பள்ளிகளையும் கல்லூரிகளையும் ஆங்காங்கே நிறுவியும் வந்தனர் இந்திய மக்கள்,

1881-ம் ஆண்டில் மொத்தக் கல்வி ஸ்தானங்கள் 12878 ஆக இருந்ததானது 1893-ம் ஆண்டில் 24316 ஆக உயர்ந்தது. கல்வி பெற்றோரின் எண்ணிக்கை 327808 ஆக இருந்தது, 734404 ஆக உயர்ந்தது. சுமார் பன்னிரண்டு ஆண்டுகளில் இருமடங்கு கல்வி ஸ்தாபனங்களும் இருமடங்கு மாணவ மாணவிகளும் உயர்ந்தனர். கிரிக் டைரக்டராக பதவி ஏற்றபோது கல்லூரிகளின் எண்ணிக்கை 24 ஆக இருந்ததானது 1893-ல் 35 ஆக உயர்ந்தது. காலேஜ மாணவர்களின் எண்ணிக்கையானது 1521லிருந்து 3537 ஆக உயர்ந்தது. தொழிற் கல்லூரிகள் 3 லிருந்து 6 ஆக உயர்ந்தன. உயர்தரப் பள்ளிகள் 76 லிருந்து 134 ஆகவும், மாணவர்கள் 4811 லிருந்து 10071 ஆகவும் உயர்ந்தனர்: மத்தியப் பள்ளிகள் 404 லிருந்து 460 ஆகவும் அவைகளின் மாணவர் எண்ணிக்கை 15625 லிருந்து 23506 ஆகவும் உயர்ந்தன. துவக்கப் பள்ளிகள் 11793லிருந்து 19097 ஆகவும் அவைகளின் மாணவர் எண்ணிக்கை 283216 லிருந்து 574668 ஆகவும் உயர்ந்தன. பெண் மாணவிகளின் எண்ணிக்கையானது 32341 லிருந்து 104938 ஆக உயர்ந்தது. ஆண் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியானது 26 லிருந்து 54 ஆக உயர்ந்தது. பெண் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி 3 லிருந்து 7 ஆக உயர்ந்தது. சட்டம், இன்ஜினியரிங் போன்ற உத்தியோகப் பயிற்சிப் பள்ளிகள் 11 லிருந்து 27 ஆக உயர்ந்தன; இவைகளின் மாணவர் எண்ணிக்கை 616 லிருந்து 2598 ஆக உயர்வடைந்தது. இப்படி யெல்லாம் 1900-க்கு முன்னர் மிகுந்த முன்னேற்ற வழியில் சென்று கொண்டிருந்தது சென்னை மாகாணம்.

இப்படிப்பட்ட முன்னேற்றத்தில் கல்லூரிகளின் வளர்ச்சியைப் பற்றி சிறிது கூறுவோம். கல்விக் கமிஷன் சிபாரிசுகள்படி தனிப்பட்டவர்களின் முயற்சியினால் கல்லூரிகள் உயர்தரப் பள்ளிகள் ஏற்படுவதற்கு அரசாங்கத்தார் ஏற்பாடுகள் செய்யலாயினர். தனிப்பட்டவர்கள், லோகல் ஸ்தாபனங்கள் ஆகியவைகள் அரசாங்கத்தாரால் ஊக்குவிக்கப்பட்டன! 1885-ம் ஆண்டில் சேலம் அரசினர் கல்லூரியானது சேலம் முனிசிபாலிடிக்கு மாற்றப்பட்டு முனிசிபாலிட்டியின் கல்லூரியாக நடந்துவரத் துவங்கியது. பெல்லாரி அரசினர் கல்லூரியைத் தொடர்ந்து நடத்திவர பெலலாரி முனிசிபாலிட்டி விரும்பவில்லையாகையால் அக்கல்லூரி மூடப்பட்டு விட்டது 1886-ல் கடலூர் அரசினர் கல்லூரியும் மூடப்பட்டுவிட்டது. அடுத்த ஆண்டு இங்கு ஒரு உயர்தரப்பள்ளி ஏற்படுத்தப்பட்டது. 1888-ம் ஆண்டில் பெர்ஹாம்பூர் கல்லூரி உள்ளூர் கமிட்டி ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டது. இதே ஆண்டு மதுரை நேட்டிவ் காலேஜானது யூனிவர்சிட்டியுடன் இணைக்கப்பட்டது கள்ளிக்கோட்டை அரசினர் கல்லூரியானது நிறுத்தப்பட்டு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியாகத் துவங்கப்பட்டது.

தனிப்பட்ட ஸ்தாபனங்களின் கல்லூரி எண்ணிக்கையானது 1893-ம் ஆண்டு விவரப்படி ஒன்பதாக இருந்தன. இவைகள் யாவும் முதல்தரக் கல்லூரிகளாகும்.

1. கிருஸ்தியன் காலேஜ, சென்னை
2. நோபில் காலேஜ, மசூலிப்பட்டினம்
3. பச்சையப்பன் காலேஜ, சென்னை
4. செயின்ட்பீட்டர் காலேஜ, தஞ்சை
5. செயின்ட் ஜோசப் காலேஜ திருச்சி
6. எஸ் பி. ஜி. காலேஜ திருச்சி
7. கால்டுவெல் காலேஜ, தூத்துக்குடி
8. செயின்ட் அலாய்சியஸ் காலேஜ மங்களூர்
9. மகாராஜா காலேஜ, விஜயநகரம்

இவைகள் யாவும் முதல்தரக் கல்லூரிகள். இவைகளைத் தவிர இரண்டாந் தரக் கல்லூரிகள் பலவும் நடந்து வந்தன.

உயர்தரக் கல்வி முன்னேற்றத்தில் முனிசிபாலிட்டிகளும் லோக்கல் போர்டுகளும் சிரத்தை எடுத்துக் கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்பட்டதின் விளைவாக முனிசிபல் போர்டு பள்ளிகள் வளரத் துவங்கின. 1881-ம் ஆண்டில் ஒரு போர்டு பள்ளிக்கூடங்கூட இல்லை. ஆனால் 1892-ம் ஆண்டில் 24 உயர்தரப் பள்ளிகளும் 125 மத்தியப் பள்ளிகளும் ஏற்பட்டிருந்தன. சர்க்கார் உதவி பெற்ற உயர்தரப் பள்ளிகளும் இதே போன்றே சர்க்காரின் ஊக்கத்தால் அதிகரித்தன. 1881-ம் ஆண்டில் 51 உயர்தரப் பள்ளிகள் இருந்தன. அவைகள் 1892-ல் 77 ஆக உயர்வடைந்தன. உபகாரம் பெற்ற மத்தியப் பள்ளிகளும் அதே போன்றே 77லிருந்து 227 ஆக உயர்ந்தன.

இக்காலத்தில் அதாவது 1881லிருந்து 1893 வரையில் துவக்கப் பள்ளிகளின் முன்னேற்றம் பிரமாதமாக இருந்தது. கீழ்க்கண்ட விவரம் இவ்வுண்மையைத் தெரிவிக்கும். முனிசிபல்லோகல்போர்டுகளும் தனிப்பட்ட ஸ்தாபனங்களும் முயற்சி எடுத்துக் கொண்டதே இப்பிரமாத வளர்ச்சிக்குக் காரணமாகும்.

துவக்கப்பள்ளி நடத்தியவர்கள்	1881-ம் ஆண்டில்பள்ளிகளின் எண்ணிக்கை	1893-ம் ஆண்டில்பள்ளிகளின் எண்ணிக்கை
1. அரசினரால் நடைபெற்றவை	158	145
2. முனிசிபல் லோகல் போர்டினரால் நடைபெற்றவை	1030	3208
3. அரசினர் கிராண்ட் பெற்று நடைபெற்றவை	5508	9482
4. அரசினர் கிராண்ட் பெறாது தனித்த முறையில் நடைபெற்றவை	5097	6262
ஆகக் கூடுதல்	11793	19097

தொழிற் பயிற்சிக் கல்லூரிகள் (Professional Colleges)

1881-ம் ஆண்டில் 3 ஆக இருந்த தொழிற் பயிற்சிக் கல்லூரிகள் 6 ஆக உயர்ந்தன. மாணவர்கள் 162 லிருந்து 959 ஆக உயர்ந்தனர்.

வைத்தியக் கல்லூரி (Medical College)

இஞ்சினியரிங் கல்லூரி (Engineering College)

சட்டக் கல்லூரி (Law College)

அல்லது பிரிசிடென்சி கல்லூரியில் நடந்துவந்த சட்டத் துறைப் பயிற்சி இலாக்கா ஆகிய மூன்றும் 1881-ம் ஆண்டில் இருந்து வந்தன, இம்மூன்று கல்லூரிகளும் 1893-ம் ஆண்டில்

விவசாயக் கல்லூரி (Agricultural College

ஆசிரியர் கல்லூரி (Teachers' College, Saidapet)

பயிற்சிக் கல்லூரி (Training College Calicut)

ஆகிய மூன்று புதியக் கல்லூரிகளும் சேர்ந்தன வைத்தியக் கல்லூரியில் 1879-ம் ஆண்டு முதற்கொண்டு பெண்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். எஞ்சினியரிங் கல்லூரி என்ற பெயரில் நடந்து வந்த கல்லூரியானது புதிய விஞ்ஞான முறையுடன் விஸ்தரிக்கப்பட்டு மராமத்து இலாக்காவிற்கு மட்டும் இராமல் மற்ற எல்லாத் துறைகளிலும் உதவியாக இருக்கும்படி பயிற்சிக் கொடுப்பதற்கான சாதனங்கள் ஆசிரியர்களுடன் நவீன முறையில் மாற்றி அமைக்கப்பட்டது. பெயரும் College of Engineering என்று மாற்றயமைக்கப்பட்டது.

1876-ல் நிறுவப்பட்ட விவசாயப் பள்ளியானது படிப்படியாக முன்னேற்றமடைந்து வந்தது. அதனை விவ

8-ம் பக்கம்

இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் குழுவினரின்

மணி மகுடம்.

●

எஸ். எஸ். ஆர். நாடகக் குழுவின் நடிகர்களில் ஒருவரான தோழர் மகாலிங்கம் அவர்களது திருமண நிதிக்காக 6—9—55 செவ்வாய் மாலை சென்னை செயிண்ட் மேரிஸ் மண்டபத்தில் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் எழுதிய 'மணிமகுடம்' நாடகம் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

*

மணி மகுடம் நாட்டின் மன்னன் மணிமாறன் புரட்சிக் கருத்துக்கள் கொண்டவன் ஏழைகள் துயர் துடைக்கப் பாடுபடுபவன், ஆனால் தன்னுடைய அமைச்சர், குருநாதர் ஆகியோரது கொடுமைகளால் அவன் ஏதும் செய்ய முடியாதவனாகி, அதே மணிமகுடம் நாட்டின் நல்வாழ்வுக்காகப் பாடுபடும் மக்கள் மன்றத்தில் — புதுமைப் பித்தன் என்ற பெயரில் சேர்ந்து பணியாற்றுகிறான். இதற்கிடையில் புதுமைப் பித்தன் மன்னனின் ஒற்றன் என்று அவனை மக்கள் மன்றத்தினர் சந்தேகிக்கின்றனர்.

நாட்டின் அமைச்சர் தன் மகளை மன்னனுக்கு கொடுத்து அதன் மூலம் மன்னனை அடக்கியாள நினைக்கிறார். அமைச்சரின் மகளோ மக்கள்மன்றத்தலைவன் பொன்னழகனைக் காதலிக்கிறாள். பொன்னழகனின் உள்ளம் அல்லியை நாடுகிறது. அல்லியின் உள்ளம் புதுமைப் பித்தனைத் தேடுகிறது!

அரச குருவான குருநாதரும் அமைச்சரும் ஒன்று சேர்ந்து மன்னனை ஒழிக்க திட்டம் தீட்டுகின்றனர். இறுதியில் இருவருக்குமே விரோதம் ஏற்பட்டு, குருநாதரே எல்லா உண்மைகளையும் கொட்டிவிடுகிறார்.

மக்கள் மன்றத்தலைவன் பொதுவுடமைப் பொன்னழகனின் அவசரத்தால் மணிமகுட நாட்டின் மன்னனான புதுமைப் பித்தனும்—அவன் காதலி அல்லியும் சாகின்றனர். இறுதியில் பொன்னழகனும் மந்திரி மகளும் ஒருவரை ஒருவர் மணந்து கொள்கின்றனர். குடியாட்சி மலர்கிறது.

கலைஞர் மு. கருணாநிதி இந்நாடகத்தின் வசனங்களை வழக்கம் போல் சுவையுடன் இனிமைத் தமிழிலும் இடையிடையே நகைச்சுவை இழையோடவும், முழுவதும் தற்கால அரசியல் நிலையை வைத்து பின்னப்பட்ட கொள்கை விளக்க கதையாகவும் எழுதியிருக்கிறார்.

புதுமைப் பித்தனாக நடித்த எஸ் எஸ். இராஜேந்திரன் அவர்கள் ஓர் இலட்சிய வீரனாகத் தோன்றி நடிக்கிறார். வசனங்களை அவர் உணர்ச்சியுடன் பேசி நடித்து ஒவ்வொரு காட்சியின் முடிவிலும் பொதுமக்களின் பாராட்டுதல்களைப் பெற்றார். அரச மன்றத்தில் அவர் பைத்தியக்காரனைப் போல் நடிப்பது நன்கு சோபிக்கிறது. அவர் பாடும் பாடல்கள் இனிமை நிறைந்து உள்ளன. சீமான்கள் சபையில் மனங்கொதித்து, குருநாதரின் புரட்டுகளை அம்பலப்படுத்தும் கட்டத்திலும், இறுதி காட்சியில் தன் எதிரே ரிவால்வருடன் நிற்கும் அல்லியைப் பார்த்து " சுடு, அல்லி! சுடு! நெற்றியிலே சுடு, நெஞ்சிலே சுடாதே, அங்கே என் அல்லி இருக்கிறாள்" என்று உணர்ச்சி ததும்பப் பேசும் கட்டத்திலும் காண்போர் மனதை உருகச் செய்கிறார்.

பொதுவுடமை வாதி பொன்னழகனாக நடிக்கும் நடிகமணி டி. வி. நாராயணசாமி வழக்கம் போல், முடுக்கான தோற்றம் எடுப்பான உடை, துடிப்பான பேச்சு இவைகளுடன் தனக்கென்று அமைந்திருக்கும் வெண்கலக் குரலில் உரையாடி நடிக்கிறார். இந்நாடகத்தில் அவரது தோற்றம் பலாத்காரத்தில் நம்பிக்கையுள்ள ஒருவனின் முகத்தைப் போல பயங்கரமாகவே காட்சியளிக்கிறது. அல்லியின் மீது சந்தேகப்படும் கட்டத்திலும் அல்லியை பலாத்காரம் செய்யும் போதும் அவரது நடிப்பு பன்மடங்கு சோபிக்கிறது.

"கொல்லப்பட வேண்டியது இந்நாட்டின் மன்னன்" என்று அவர் உரக்கப் பேசும் போது உண்மையிலேயே நமக்கு "பெர்லின் வீழ்ச்சி" என்ற ரஷ்யப் படத்தில் ஹிட்லராக நடித்தவரை நினைவுக்குக் கொண்டு வருகிறது.

நகைச்சுவை நடிகர் எமன். கிருஷ்ணன் அவர்கள் புதுமைப்பித்தனின் நண்பனாக— கருப்பு ரோஜாவாக நடிக்கிறார். அவர்— தன்னுடைய காதல்ஜோடியான வஞ்சியுடன் கொஞ்சிக் குலவும் கட்டங்களில் நம்மைப் பெருநகைப்பில் ஆழ்த்தி விடுகிறார். அவருடன் வஞ்சியாக நடித்த தோழியரும் பாராட்டத்தக்க முறையில் நடித்தார்.

அல்லியாக நடித்த தோழியர் மனோரமா அவர்கள் புதுமைக் கருத்துக்கள் கொண்ட பெண்ணாக—புரட்சி எண்ணங்கள் நிரம்பியவளாக நடிக்கிறார். குடிசைகள் தீயிடப்படும் கட்டத்திலும்—மன்னனைக் கொல்லப் போகும் கட்டத்திலும் நம்முடைய மனதில் விவரிக்க முடியாத ஒரு பயங்கர உணர்ச்சியை ஏற்படுத்தி விடுகிறார்.

மந்திரி மகளாக நடித்த தோழியர் குமாரி பொன்னழகனை தன் மீது காதல் கொள்ளும்படி வற்புறுத்தும் கட்டங்களில் திறப்பட நடிக்கிறார்.

மற்றும் குருநாதர், அமைச்சர், மக்கள் தொண்டர், பத்திராதிபர், அரிகரநாதன் போன்ற பாத்திரங்களை ஏற்று நடித்தவர்கள் கதையின் மற்ற பாத்திரங்களுடன் இணைந்து ஒருவருக்கொருவர் சளைக்காமல் நடித்தனர்:

பின்னணி இசை, ஒளி அமைப்பு உடை அலங்காரம் ஆகியவைகள் நாடகத்தின் சிறப்பை மேலும் அதிகப்படுத்தித் தந்தன எனக் கூறின் மிகையாது.

காட்சி ஜோடனைகள் கண்ணைப் பறிக்கும் வண்ணம் இருந்தன. நாடகத் துறையில் ஒரு குறிப்பிட்ட கோஷ்டியினரால்தான் —காட்சி ஜோடனைகளை கனகச்சிதமாக அமைக்க முடியும் என்ற நிலையை மணிமகுடம் காட்சி அமைப்புகள் மாற்றி அமைத்து விட்டன,

தலைமை வகித்த அறிஞர் அண்ணா அவர்கள் "இராசேந்திரன் குழுவினரால் நடிக்கப்படும் இந்நாடகம் சென்னையிலே மிகப் பெரிய அரங்கிலே, பல்லாயிரக் கணக்கான மக்கள் மத்தியிலே நடித்துக் காட்டப் படவேண்டிய நாடகங்களில் ஒன்று" என்று குறிப்பிட்டது நாடகத்தைப்பற்றி நன்கு தெரிந்துகொள்ள ஏதுவாகும்.

அண்ணா அவர்கள் தெரிவித்த ஒரு சில மாறுதல்களுடன், 'மணி மகுடம்' தமிழகத்தில் வெற்றி வாகை சூடி மேலும் பவனி வர ஆசைப்படுகிறோம்.

—ந. சோ. சு.

மிருகக் காட்சி சாலையிலே ஒரு நாள்!

மும்மலத்தையும் சுட்டெரித்த முக்கண்ணன் ஒளியை அள்ளிவீசும் வெள்ளிஅம்பலத்திலே, பார்வதியின் வருகைக்காக ஆர்வம் கொப்புளிக்க, தலையிலே தரித்த கங்கைக் கன்னியிடமிருந்து வருகின்ற கமல மலரின் மணத்தை நுகர்ந்துகொண்டே, அமர்ந்திருந்தான். பரிக்கு பதில் நரி வருவதுபோல வேல்விழியை எதிர்பார்த்த வேத முதல்வனுக்கு முன் வேள் முகத்தோன், ஓலமிட்டுக் கொண்டு வந்தான், புத்திரனுக்கு ஆறுதல் கூறி, அழுகைக்குக் காரணம் கேட்டான், ஆதிஅப்பன். தம்பி அடித்ததாக தமையன் கூறவே, குன்றம் எரிந்த குமரப் பெருமான் கூண்டிலேற்றப்பட்டான்.

அப்பா! அண்ணன் என் கண்ணைத் தொட்டு ஒவ்வொன்றாக எண்ணினான் அதனால் அடித்தேன். தகப்பன்சாமி தந்த பதிலைக் கேட்டு உண்மையா! என்று கேட்பதுபோல மலையான் மூத்த மகனை நோக்கினான். விநாயகன் விட்டுவிடுவானா!

அப்பா, தம்பி என் தும்பிக்கையை பிடித்து கையால் முழம் போட்டு, நீளத்தை அளந்தான். அதனால் நான் விழிகளை எண்ணலானேன் தும்பிக்கையான் பதில் கேட்டு துடி தூக்கி சிரிப்பதா அழுவதா என சிந்திக்கும் பொழுது உமையம்மை வந்தாள். உடனே திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள் மைந்தர்களின் தகராறைக் கூற, மாதா குமாரர்களின் குறும்பை கேட்டு நகைத்து, பெற்றெடுத்த அழகுச் செல்வங்களை இழுத்து மடிமீது கிடத்தி அணைத்துக் கொண்டாள்.

ஆண்டவனால் படைக்கப்பட்ட சாதாரண மனிதர்களுக்கே அழகுத் தெய்வமாக குழந்தைகள் பிறக்கும் பொழுது ஆண்டவனுக்கு மட்டும் குழந்தைகள் ஏன் விகாரமாக, அவலட்சணமாக பிறக்க வேண்டும்! இப்படி யாரும் என்னை கேட்டுவிடாதீர்கள். கயல், வில், புலி கொடி தூக்கி ஆண்டு, பின் அயல்மொழி கலாச்சாரத்துக்கு இரையாகி குயில் வடிவில் கூவிக்கொண்டு வந்த, புயலில் சிக்கி புலம்பிய புலவர்களைக் கேளுங்கள். அவர்கள புளுகிய புராணப்படி, சிவனிருந்தால், சிவனுக்கு குடும்பமிருந்தால், அந்தக் குடும்பத்தில் மேலே சித்தரித்துக் காட்டிய தகராறு நிகழாது இருந்திருக்குமோ! கற்பனையை அடிப்படையாகக் கொண்டு செய்த கற்பனையே இது! ஆனால் இந்தக் கற்பனை நாத்திகருடையதல்ல. அப்படி இருந்தால் கடவுளை நிந்திக்கும் கயவர்கள் என்று உடனே உரைக்கத் தொடங்குவர். உட்பொருள் உணராதவன் என்று தத்துவ விளக்கம் தர முயல்வர். விநாயகர் என்பது ஓங்கார சொருபம். ஓம் என்ற அக்ஷரத்தின்வடிவம். முருகன் என்பது அழகு, இளமை, வீரம் இப்படி பித்தலாட்டத்தை தத்துவார்த்தமாக்குவர். வைரத்தை வைரத்தால் அறுப்பதுபோல் கற்பனையை கற்பனையைக் கொண்டே கிண்டல் செய்கிறார் கவிஞர். கவிஞரது பாட்டின் கருத்தே ஆரம்பத்தில் காட்டப்பட்ட சிவனார் குடும்பத்து நிகழ்ச்சி! கவிஞரின் படப்பிடிப்பை பாருங்கள்.

'அரவனவடத்திலே யைங்கரன் வந்ததா
ணையவன் செவியை மிகவும்
அறுமுகன்கிள்ளின னென்றேசினுங்கிடவு
மத்தன் வேலவனை நோக்கி
விரைவுடன் வினவவே யண்ணனென் சென்னி
யில் விளங்குகண் எண்ணினனென
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்து நீய்ப்படி
[விகடமேன் செய்தாயென
மருவுமென் கைந்நீள முழமளந்தானென்ன
[மயிலவன் நகைத்து நிற்க
மலையரனுதவவரு முமையவளை நோக்கின்
[மைந்தரை பாராயென
கருதரிய கடலாடை யுலகுபல வண்டங்
[கருப்பமாய் பெற்ற கன்னி
கணபதியை யருகழைத் தக மகிழவு
[கொண்டவள் களிப்புடன் உமைகாக்கவே'

யானை, நந்தி, ஆறுமுகங்கள், பாம்பு, ஆமை, பன்றி இப்படி பிராணிகளை யெல்லாம், கடவுளாக்கி அமைத்த மிருக காட்சி சாலையிலே ஒருநாள் ஒரு கூண்டிலே, குடும்பத்திலே நடந்த நிகழ்ச்சியைத் தான், நமக்கு கவிஞர் கவிதையாக்கி காட்டுகிறார். கவிஞர் யார் தெரியுமா! சிவப்பிரகாச சுவாமி! பழுத்த ஆத்திகர்.

பகுத்தறிவாதிக்கு பயந்து சொத்தை கட்வுட்கெல்லாம் தத்துவ விளக்கம் தந்து வயிறு வளர்க்கும் வஞ்சகர்களுக்கு சிவப்பிரகாசரை காட்டி, வினா யெழுப்புகிறோம். அவர் உணராதவரா! உட்பொருள் தெரியாதவரா! கடவுள் இல்லை என்ற புத்தனையே கடவுளாக்கியதுபோல் கடவுள் கொள்கையின் போலித்தனத்தை கண்டித்து எழுந்த கவிதைகளையே நிந்தாஸ்துதி என்றுரைத்து மானத்தைக் காப்பாற்றிக் கொண்டதுபோல (மனதில்) இப்படிப்பட்ட பெரிய சிவப்பழங்கள் தீட்டிய கவிதையை காட்டி கேட்டால், இலக்கிய நயம் என்று கூறி தப்பித்துக் கொள்வர். பாதுகாப்பின் பலத்தை பரிசிலனை செய்ய திருடினேன், என்று கள்வன் காரணம் காட்டுவதுபோல், ஆரிய புராண ஆபாசத்தை அடியார்களின் வாக்குமூலத்தை வைத்தே இறைவனிடம் ஆண்டவன் மீதுள்ள அளவற்ற ஈடுபாடென கூறுகின்றனர்; வெட்கமின்றி !

சி. சிவகுருநாதன், தஞ்சை.

ஆரம்பக்கல்வி தொடர்ச்சி

சாயக் கல்லூரி என்று 1886-ல் (College of Agriculture) மாற்றியமைத்தனர். பாட திட்டங்களும் பரீட்சைக்கான முறைகளும் விரிவாக்கப்பட்டன.

பிரசிடென்சி கல்லூரியுடன் நடந்து வந்த சட்டத்துறை இலாகாவை மாற்றி சட்டக் கல்லூரி என்று திறவ 1888ல் மிஸ்டர் கிரிக யோசனை கூறினார். இவர் யோசனையை சர்க்கார் ஏற்றுக் கொண்டனர் 1891-ம் ஆண்டு மே மாதம் 1-ந் தேதி புதிய சட்டக் கல்லூரி துவக்கப்பட்டது. அதே தேதியில்தான் பெயர்பெற்ற சட்ட அறிஞர் மிஸ்டர் நெல்சன் என்பார் சட்டக் கல்லூரியின் பிரின்சிபாலாக பதவி ஏற்றுக் கொண்டார்.

1856-ல் நிறுவப்பட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளியானது (Normal School) படிப்படியாக மாற்றங்கள் அடைந்து வந்தது. 1883-ல் புதிய பாட திட்டங்கள் புகுத்தப்பட்டன. 1886-ம் ஆண்டில் இந்தப்பள்ளியானது சைதாபேட்டைக்கு மாற்றப்பட்டது. 1886 பிப்ரவரியில் இதனுடைய பெயரை ஆசிரியர் கல்லூரி Teachers' College) என மாற்ற அமைத்தனர். இக்கல்லூரி சென்னை யூனிவர்சிட்டியுடன் இணைக்கப்பட்டது.

கள்ளிக்கோட்டை யிலிருந்த சர்க்கார் கல்லூரியானது இரண்டாந்தர பயிற்சிக் கல்லூரியாக (Second Grade Training College) 1892-ல் மாற்றியமைக்கப்பட்டது.

தொழிற் கல்வியும் டெக்னிகல் கல்வியும் (Industrial and Technical Education)

தொழிற் கல்வியும் டெக்னிகல் கல்வியும் மாணவர்கட்கு அவசியம் எனக் கூறி அதற்கானப் பள்ளிகள் நிறுவுவதற்கான ஒரு திட்டத்தை 1883-ம்ஆண்டில் கிரிக் சர்க்காருக்கு அனுப்பி வைத்தார். சர்க்காரும் இதன் அவசியத்தை உணர்ந்தனர். இப்புதியக் கல்வி முறைகள்தான் தென்னிந்தியக் கல்விச் சரித்திரத்தை புகழ் வாய்ந்ததாகச் செய்துவிட்டன.

தொழிற் துறை சம்பந்தப்பட்ட Geology, Music, Carpentary Printing, Tailoring, Telegraphy, Domestic Economy, Boot &Shoe Making, Electricity, and Magnetism, Modelling and Wood Engraving, Jweller and Silversmith's Work, Iron—Smith's Work, Industrial Needle Work முதலிய கல்வி பயிற்சிகளும் திட்டத்தில் காணப்பட்டன.

வியாபாரத் துறை சம்பந்தப்பட்ட Short-hand, Book-Keeping, Mercantile Arithmetic, Commercial Geography, Commercial Correspondence, Fire, Life and Marine Insurance Advanced Spelling, Superior Penmenship, முதலிய கல்விப் பயிற்சிகளும் திட்டத்தில் இடம் பெற்றிருந்தன.

சென்னை மாகாணத்திலிருந்த எல்லாப் பள்ளிகளும் இக்கல்விகளை கற்பிக்க விழைந்து அதற்கானத் துறையில் ஈடுபட்டு வெற்றியும் அடைந்தன.

இக்கல்விகளில் தேர்ச்சி பெறுவதற்கென அரசினர் டெக்னிக்கல் பரீட்சை (Government Technical Examination) என்ற பரீட்சைமுறை புகுத்தப்பட்டது. 1886-ம் ஆண்டு செட்டம்பர் மாதம் 6-ந் தேதி இந்த டெக்னிக்கல் பரீட்சை முதன்முதலாக நடந்தது. இதிலிருந்து இந்தப்பரீட்சை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த வண்ணமுள்ளது. இக்கல்விப் பயிற்சிக்கென சர்க்கார் கிராண்ட் உதவியும் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

தொழிற்கல்விப் பள்ளிகளும் சிறந்த முறையில் வளர்ச்சியடையத் துவங்கின. சர்க்காரும் அதன் வளர்ச்சிக்கு உதவி புரிந்து வந்தனர்.

1 Art and Industrial School Nazareth
2 The Anjumanai — Mufeedi—Ali-Islam
3 The Madras Industrial School
4 St. Patrick's Orphanage, Adyar

முதலிய தொழிற் பயிற்சிப் பள்ளிகள் சர்க்கார் உதவி பெற்று வளர்ந்தவைகளே. 1892-93-ல் 16 தொழிற்துறைப் பள்ளிகளும் இவைகளில் 1046 மாணவர்களும் பயின்று வந்தனர். கல்லூரிகளிலும் தொழிற்கல்வி பயிற்சிகொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன ராஜமுந்திரி கல்லூரியில் Electro—Metallurgyயும், Carpentaryயும சற்றுக் கொடுக்கப்பட்டன கும்பகோணம் கல்லூரியில் Drawing சற்றுக் கொடுக்கப்பட்டது மதுரையில் Technical-Institute ஒன்று மதுரை லோகல் போர்டால் 1890-ல் நிறுவப்பட்டது. இத்துறையில் கிருஸ்தவ மிஷனரிகள் அதிக கவனம் செலுத்தி பல தொழிற் பயிற்சி பள்ளிகள் நிறுவி நடத்தி வந்தனர்.

இப்படிப்பட்டத் தொழிற் பயிற்சி பள்ளிகள் நடத்தப் பெருந்தொகை செலவு செய்ய நேரிடுவதாலும், அதற்கானத் தகுதியும் திறமையும் பயிற்சியும் பெற்ற ஆசிரியர்கள் கிடைப்பது அரிதாயிருந்தபடியாலும் இக்கல்விப் பள்ளிகள் விரிவு அடைவதில் சிரமமிருந்து வந்தது.

பச்சையப்பன் கல்லூரி பிரின்சிபாலாக இருந்த மிஸ்டர் ஜான் ஆதாம் அவர்களின் யோசனையின்படி 1886ம் ஆண்டு பிப்ரவரியில் பச்சயப்பன்ட்ரஸ்ட் போர்டினால் ஒரு கம்மர்சியல் நடுதரப் பள்ளி (Commercial Middle School) துவககப்பட்டது. இந்தப் பள்ளியானது பின்னர் செங்கல்வராய நாய்க்கர் என்பார் விட்டுச் சென்ற பெருஞ் செல்வத்தின் உதவியினால் அவரது பெயரிலேயே உயர்தர தொழிற் கல்விப் பள்ளியாக (Chengalvaraya Naicker's Commercial High School) வளர்ச்சி யடைந்தது. இப்போது பெரும் தொழிற் பயிற்சிக் கல்வி நிலையமாக (Changalvaraya Naicker's Technical Institute) விளங்கி வருகிறது.

விக்டோரியா மகாராணியாரின் வெள்ளி விழா நினைவாக சென்னையில் விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிட்யூட் (Victoria Technical Institute) என்ற பெயரில் 1890-ல் துவக்கப்பட்டது. இப்போதும் இப்பள்ளி புகழ்பெற்ற பள்ளியாகத் திகழ்ந்து வருகிறது. —தொடரும்

பாலைவன ரோஜா தொடர்ச்சி

தான் நாம் எதிர்பார்க்கும் காரியம் கைகூடும்!

வீர: மூர்த்திடைக் கடத்திப் போய்விடலாமென்று கூறுகிறாயா?

பல: இதனுலெல்லாம் அந்தக் காதலன்பு குறையாதடா வீரா... இதய தாகம் வளரத்தான் செய்யும்.

வீர: ஏதாவது அங்கத்தைப் பங்கப் படுத்தி விட்டால்?

பல: அதெல்லாம் வீண்முயற்சி வீரா! ராஜம்—மூர்த்தியை ஒன்ருக இணைத்துக் கொண்டிருக்கும் காதல் கயிற்றை எப்படியாவது அறுத்து விட வேண்டும். மூர்த்தியின் இதய வெளியிலே விஷவிதையைத் தூவ வேண்டும். ராஜத்தை நினைத்தாலே அவன் நெஞ்சு கொதிக்க வேண்டும். நேற்று இரவெல்லாம் விழித்திருந்து இந்தத் திட்டத்தைப் போட்டு முடித்தேன் வீரா! இந்தக் காமிராவின் துணையால் தான் நமது திட்டமே வெற்றியடையப் போகிறது. இன்ரூ, நாளையோ ஆற்றேரத்தில் ராஜமும்—மூர்த்தியும் சந்தித்துப் பேச வருவார்கள். அப்போது பாதி வழியிலே ராஜத்தை வழி மறித்து வம்பு செய்கிறேன்...ஆபாசமான கட்டத்தில்.....எங்களிருவரையும் சேர்த்து...இந்தக் காமிராவில் நீ படமெடுத்து விடு வீரா!

வீ: 'பேபி' காமிராவிலே தானேப்பா எனக்கு எடுத்துப் பழக்கம். இதுலே லேட்டும், கம்பியும் எதேதோ இருக்குதே...ஒன்னும் புரியலையே.

பல: வீரா நான் சொல்லித்தருகிறேன். பார்த்துப் பழகிக் கொண்டு...

வீ: பலவேசம்...சரியான திட்டம். நிச்சயம் வெற்றி மாலை நமக்குத் தான். கடிதத்தை வைத்துத் திகம்பரரையும், படத்தைக் காட்டி மூர்த்தியையும் மிரள வைக்கலாம். உயிரோடு வாட்டி வதைக்கலாம்!

(அடுத்த வாரம்)

சிதம்பர ரகசியமா தொடர்ச்சி

ரகசியத்தை ஒளித்து வைத்துக் கொண்டிருந்தாலும், அல்லது ரகசியம் ஒன்றுமில்லை என்று கூறப்பட்டாலும், அவரைப் போன்ற எண்ணமுடையவர்களுக்கு வெளிப்படையாக ஒன்றை நினைவூட்ட விரும்புகிரேம்.

தட்சிண பிரதேசம் என்ற பேராலோ அல்லது வேறெந்த பெயராலோ தென்னடு ஒரே ராஜ்யமாக இயங்குவதென்ற கொள்கை செயல்படும்போது தமிழகம், ஆந்திரம், கேரளம், கன்னடம் ஆகிய பகுதிகள் மொழிவழி அடிப்படையில் பிரிக்கப்பட்டு அந்தந்த மொழிவழி அமைப்புக்கு உற்ற உரிமையும் அதே சமயத்தில் இந்தியப் பேரரசின் எவ்வித ஆதிக்கத்துக்கும் குனிந்து கொடுக்காத சுதந்திரத் தன்மையும் கொண்டதாய் அமைந்தால்தான் உள்ளபடியே தென்னட்டு மக்களின் வாழ்வு வளம்பெறும். தென்னடும் மற்றநாடுகளோடு தோழமையுடன் இயங்க முடியும் என்பதை சென்னை மேயர்—மைசூர்முதலமைச்சர் போன்றவர்கள் உணருமாறு பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிரேம்.

நடக்க இருப்பவை

இராசிபுரம் !

11-9-55 காலை 9-மணிக்கு இராசிபுரம் தி மு க. சார்பில் மாநில மாநாட்டு நிதிக்காக ரங்கவிலாஸ் தியேட்டரில் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம் தோழர், ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், புரட்சி நடிகர் எம் ஜி ராமச்சந்திரன் பேசுவர் அன்று மாலை 6-மணிக்கு இராசிபுரம் புதுச் சந்தைப் பேட்டையில் தோழர் பி. ராமலிங்கம் தலைமையில் பொதுச்செயலாளர் அவர்களுக்கு வரவேற்பு பாராட்டுக் கூட்டம் நடைபெறும்.

கள்ளக்குறிச்சி

12-9-55 திங்கள் மாலை 6 மணிக்கு கடைவீதி அடுத்த திடலில் நடைபெறயிருக்கும் பொதுக்கூட்டத்தில் துணைப் பொதுச்செயலாளர் என்.வி. நடராசன் பேசுவார். அதுபோது அவருக்கு வரவேற்பும் பாராட்டும் அளிக்கப்படும்.

மதுரை

கீழச்சந்தைப்பேட்டை அண்ணுதுரை இலவசப் படிப்பகத்தின் பொதுஉறுப்பினர் கூட்டம் 11—9—55 மாலை 5 மணிக்கு மேற்படி படிப்பகத்தில் நடைபெறும் என செயலாளர் எஸ். முனியப்பன் அறிவிக்கிருர்.

திருமணங்கள்

11—9—55 காலை 8-30 மணிக்கு திரு. க. மு. இராமச்சந்திரன்—புஷ்பாவதி அம்மை ஆகியோருக்கு திருவொற்றியூரில் டி சண்முகம் எம். எல். ஏ. தலைமையில் திருமணம் நடைபெறும். தோழியர் சத்தியவாணிமுத்து, ஆர். எஸ். பாண்டியன் பேசுவர்.

*

11-9-55 காலை 9-மணிக்கு சென்னை குளேபட்டாளம் ஸ்ரீ பிரகாசா நகர் பழைய பென்ஷன் லைனில் திரு எம். வரதராசன்—மாணிக்கவாசகி ஆகியோருக்கு என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும். தோழர்கள், ஆர் எஸ். பாண்டியன், கதிர் டி. சுப்ரமணி, கோ. இளவரசு, மாணிக்கம், எம். ஏ., பேசுவர்.

*

11-9-55 காலை 8.30-மணிக்கு திருவொற்றியூரடுத்த சின்ன சேக்காடு கிராமத்தில் பெ. சுப்ரமணி — இரஞ்சிதம்மாள் ஆகியோருக்கு சி. டி. டி. அரசு அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும். தோழியர். அருண்மொழி, வலையாபதி முத்துகிருஷ்ணன் பேசுவர்.

*

12—9—55 திங்கள் காலை 9 மணிக்கு (தெ ஆ) கள்ளக்குறிச்சி கஸ்பாவில் கோவை திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் சங்க அமைப்பாளர் இரா. சுந்தரத்திற்கும் தோழியர் பரிமளாவிற்கும் கோவை வாசன் தலைமையில் திருமணம் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன் கோவை நெடுஞ்சோழன் பேசுவர்.

சென்னை 43-வது வட்ட தி. மு. க.

1-9-55-ல் கூடிய செயற்குழுக் கூட்டத்தில் சென்னைத் தோழர் எம். எஸ். முகம்மது மூசைதீன் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், கோவா விடுதலைப் போராட்டத்தில் உயிர் துறந்த வீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தியும், போர்ச்சுகீசிய சர்க்காரின் வெறிச் செயல்களைக் கண்டித்தும், கோவாப் பகுதிகளின் விடுதலைக்கு அவசியமான நடவடிக்கைகளை உடனடியாக இந்தியப் பேரரசு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அன்றியும் கிளைக் கழகத்தின் கடந்த மூன்று மாத வரவு—செலவு கணக்குகள் சரி பார்க்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது. மற்றும் திராவிடப் பிரிவினை வாரம்' சம்பந்தமாகவும் கிளைக்கழக நூல் நிலையம் சம்பந்தமாகவும் சில முடிவுகள் செய்யப்பட்டன.

கிளைக் கழகங்கட்கு வேண்டுகோள்

1956-ம் ஆண்டு திராவிடர் நாட்குறிப்பில், தி. மு. க. கிளைகளின் விவரங்களை வழக்கம் போல் வெளியிட இருப்பதால், ஒவ்வொரு கிளைக்கழகத்தின் செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர், இவர்களின் பெயர்களையும், எந்த மாவட்டத்தைச் சேர்ந்தது என்ற விவரத்தையும் 5-10-55-க்குள் கிடைக்கும்படி, 'போர்வாள்' 147, பவழக்காரத் தெரு, சென்னை, என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு செயலாளர்கள் வேண்டிக் கொள்ளப் பெறுகிறார்கள்.

பொறுப்பாளர், 'போர்வாள்'

முதல் முகலாயப் பேரரசி சரித்திரச் சித்திரம்

சுல்தானா ரசியா

கௌதமன்

3

அரச பதவிக்கு மட்டுமல்லாமல் வாழும் வாய்ப்புக்கும் உலைவைக்கத் துணிந்திட்ட குணக்கேடர்களின் ஈட்டி முனைகளைத் தாங்கிக் கொள்ளும் ஒரே வலிமை பெற்ற கேடயமாக இருந்தது—ரஸியாவைப் பொருத்தமட்டில்—இஸ்லாமியப் பள்ளிவாசல்தான்! அங்கு வந்து குழுமி தொழுது மகிழும் புனித மக்களினுல்தான், தன் குறைபாடுகளை—நெஞ்சக் குமுறல்களைக் கேட்க முடியும்; கேட்பதோடல்லாமல்; தனக்கான வகையில் எல்லா சலுகைகளையும் தேடிக் கூடத் தரக் முடியுமென்று அவள் எண்ணினுள். அவளின் அந்த யூகம், அந்த நேரத்தில் அவளுக்கு ஒரு விதத்தில் மகத்தான வெற்றியைத்தான் தேடித் தந்ததென்றுலும் மிகையல்ல அது!

இழந்த அரசுரிமையை மீண்டும்பெற எத்தனையோ முறைகளுண்டு இவ்வையகத்தில். எதிரிகளோடு போரிட்டு உரிமை பெறுவது—அவனுக்குச் சரணடைந்து அடங்கி வாழ்வது—அவனிடம் கப்பத் தொகையோடு சதா காவடி எடுத்துக்கொண்டு ஒடுவது—அவன்கீழ் ஓர் சிற்றரசனுகவாவது இருக்கச் சம்மதிப்பது—ஆகிய இவை போன்ற முறைகள் ஓர்விதம்!

புரட்சி செய்வது—பூசல் விளைவிப்பது—மக்களைத் தூண்டாடுவது—நாட்டைத் தாக்குவது—ஆட்சியைக் கவிழ்ப்பது—இது மற்ருெரு விதம்!

ஆனுல் இந்த இரண்டு விதமான வழிகளில் எதையுமே செய்ய விரும்பவில்லை ரஸியா! மக்களைக் கூவியழைத்து அவர்களிடம் நியாயம் கோருவது என்ற முடிவைத் தவிர, போரிடுவதோ—முதலில் ஓடி ஒளியப் புகலிடம் தேடி பிறகு, எதிரியின் வைரியொருவனைக் கண்டெடுத்து, அவனும் இவளுமாகச் சேர்ந்து தாக்குவதோ—போன்ற எந்த முறையையுமே இவள்பின்பற்ற விரும்பவில்லை. நாட்டு மக்களிடம், நம்பிக்கையும் இஸ்லாமிய கலாச்சாரத்தில் மங்காததொரு பெருமிதமும் அவள் கொண்டிருந்ததே இதற்குப் பெரிதும் காரணமாகும்! மேலும் எதிரியொருவனேடு சேர்ந்து தன் தாயகத்தையே தாக்கினுல் நாடு கிடைக்கும் என்ற உண்மையை அவள் அறிந்திருந்ததிலும் மேலாக அப்படிக் கிடைக்கும் நாட்டிலே அமைதியையும் சமாதானத்தையும், தான் எதிர்பார்த்திருக்க முடியாது என்ற உண்மையையும் அவள் பெரிதும் உணர்ந்திருந்தாள்! பலவேறு சிற்றரசர்களையும் உள்ளடக்கி மகத்தானதோர் பேரரசனுக விளங்கிய மன்னன் ஆல்டாமிஷின்—பெருமை இதனுல் குன்றிவிடும் என்பதையும், போரிட்டு வெற்றி பெற்ருல் தன்னுடன் சேர்ந்து போரிட்ட நேசநாட்டினருக்குத் தான் நிச்சயம் சலுகை காட்டியே தீரவேண்டும்—அப்படிக் காட்டா விட்டால், மீண்டுமோர் உள்நாட்டுக் குழப்பமேற்படும் என்பனபோன்ற எண்ணங்களும் அவளுள்ளத்திலே தோன்றித் தோன்றி மறையத்தான் செய்தன. எனவேதான் எந்த ஓர் இலட்சியமும் குன்ருமல் எந்த ஓர் பெருமிதமும் பாழ்படாமல், புதிய முறையைத் தேர்ந்தெடுத்தாள் ரஸியா, தந்தை புகட்டிய அனுபவம், நல்ல தருணத்தில் அவளுக்குப் பக்கபலமாகத் திகழ்ந்தது. ஆகவே நாடு கிடைக்க இஸ்லாமியப் பெருமக்களிடம் முறையிடுவதுதான் சாலச் சிறந்தது என்ற எண்ணம் அவளை நேராக பள்ளிவாசலுக்கு அழைத்து வந்துவிட்டது.

ஓம்ராக்களும், மத குருமார்களும், பிரபுக்களும், பிரதானியரும் இஸ்லாமியப் பெருமக்களின் முன்பு வந்து குழுமும் ஒரே அரிய சந்தர்ப்பம் தொழுகை வாசலிலல்லாமல் வேறெந்த இடத்திலும் கிடைப்பதரிது. எனவேதான் பள்ளிவாசல் நாடி வந்தாள் அந்த பைங்கிளி!

ஆம்! பைங்கிளிதான்! பச்சை நிற உடை—இஸ்லாமியப் புனிதச் சின்னமது. காற்றிலே அசைந்தாடும் மெல்லிய பூங்கொடியின் நுனியிலே வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கி சிரிப்பதைப் போல அந்தத் தளிர் மேனியாளின் தோற்றத்திலே எந்த ஓர் புதுமையும் காணப்படவில்லை. அணிகலன்களில்லை, ஆபரணங்களில்லை! வைரமில்லை! பச்சையுமில்லை! கெம்பும் பவழமும் முத்தும் வைடூரியமும் அவளுடலிலே காணப்படவில்லை. சாதாரண பச்சையுடை—முறையிடு வோருக்கென ஒதுக்கிவைக்கப்பட்ட சின்னம். மாசற்ற பெண்ணுடையிலே வரும் தொழுகைக்காரர்களின் மத்தியிலே, குறை கொண்டவரையும் முறையிடுவோரையும் கண்டு பிடிக்க, ரஸியாவின் தந்தை காலத்திலே ஒதுக்கி வைக்கப்பட்டச் சின்னம், அதை யணிந்து வருவோர் எவராயினும் இஸ்லாமியத் தொழுகைப் பெரியோர்களால் வினவப்படுவர். குறைகளுக்குப் பரிகாரமும் வழக்கு மன்றங்களுக்கு மீறிய வழக்குகளுக்கு கருணையும், அல்லது நல்ல தீர்ப்புங்கூட அவர்கள் நல்குவர்! புனராலோசனையும் அங்கே நடைபெறும். இந்த ஏற்பாடு ரஸியாவின் தந்தையால் நிறுவப்பட்டதொன்ருகும். தந்தை நிறுவியது மகளுக்கு நியாயம் வழங்கும் மன்றமாகப் பயன்பட்டதும் ஆச்சர்யந்தான்.

பல்லக்கை விட்டிறங்கிய ரஸியா பள்ளிவாசலின் முன் நின்ருள். இஸ்லாமிய மக்களை, மாளிகையின் உச்சியினின்றும், தொழுகைக்காக, கூவியழைக்கும் 'முல்லா' இளவரசி ரஸியாவின் வருகையைக் கண்டு, ஓடோடியும் சென்ருர். உள்ளே—மற்றவருக்குத் தெரிவிக்க! மறுகணம் சூழ்ந்து நின்றனர் இஸ்லாமிய மக்கள்! மசூதித் தலைவரும் ஓடோடியும் வந்தார் சேதி கேட்டு ரஸியாவை வரவேற்க! பிரபுக்களும், ஓம்ராக்களும் கூட ஓடோடியும் வந்தனர் முகஸ்துதிக்காக! ஆச்சர்யத்தால் நிலைமாறிய அவர்களின் கண்களைப் பறிப்பதைப் போல, ரஸியாவின் பச்சை நிறச் சின்னம் ஒளிவிட்டுக் கொண்டிருந்தது.

'ஆஹா! வந்ததே தீம்பு!—இப்படியொரு திடீர் தாக்குதல் அவர்களுள்ளத்தில்!

ஆனுல், இஸ்லாமியப் பெருமக்களோ—நினைத்ததும் சரிதான்! — இளவரசியார் வந்ததும் சரிதான்!—என்று எண்ணினார்!

வாயிற்படியிலே ஸ்தம்பித்து நின்ற கூட்டம்—அதன் மத்தியிலே ரஸியா! வெண் பட்டாடைகளுக்கு மத்தியிலே ஓர் பச்சை மென்றுகிற் பாவை! நல்வாழ்வு பெற்ருேர்களுக்கு மத்தியிலே ஓர் குறைகண்ட இதயம்! அதே இதயத்தைத் தாங்கி நின்ற ரஸியாவின் எழில் வதனத்திலே பொலிவில்லை. பளிங்குக் கன்னம் சிவந்திருந்தது, ஒளிவிடும் நெற்றியிலே கவலை ரேகைகள் படர்ந்திருந்தன. கண்கள் கவலையைப் பேசின. நெஞ்சம் குமுறலைத் தாங்காமல் தாங்கிக் கொண்டிருந்தது. அமைதியாக நின்ருள். ரசியா! பேசவில்லை—ஏன் பேச வேண்டும்! தன் நிலைமையை அனைவரும் புரிந்து கொண்டது மட்டுமல்ல; ஒரு சிலர் அதை உணர்ந்தும் வருந்திக் கொண்டிருக்கிருர்களென்பதை அவள் ஒருவாருகப் புரிந்து கொண்ட பிறகும் ஏன் பேச வேண்டும்! எனவேதான் சோகச் சிலையானுள் ரஸியா!

'தொழுகையை ஆரம்பிக்கலாமா...!—வாயிற்படியிலேயே கேட்டார். பள்ளிவாசல் தலைவர் இப்படி! உள்ளே வாருங்கள் இளவரசியாரே என்றழைக்கவும் மறந்து விட்டார் அந்தத் தலைவர்! மறந்து விட்டார் என்பதுகூட அவ்வளவு பொறுத்தமல்ல; ரஸியாவின் சோக நிலையும் கவலை சூழ்ந்த தோற்றமும் அவள் பச்சை யணிந்த ஆச்சர்யமும் பள்ளிவாசற் தலைவரின் சித்தத்தை ஸ்தம்பிக்கச் செய்து விட்டது என்பது தான் வெகுவான பொருத்தம்! நடைமுறைகளையும் ராஜ மரியாதைகளையும் கூட மறக்கச் செய்யுமளவில் ரசியாவின் திடீர் வரவு அனைவருள்ளத்தையும் ஸ்தம்பிக்கச் செய்துவிட்டது.

ஆனுல் நிலைமையைப் புரிந்து கொண்ட ரஸியாவோ—ஒன்றும் பேசாமல் உள்ளே நடந்தாள், பின்னுல் வந்தனர் அனைவரும், வழக்கமான இடத்திலே போய் முழந்தாளிட்டு வணங்கத் தொடங்கினுள். தொழுகையும் ஆரம்பமாகியது.

ஆனுல் தொழுகையின் மத்தியிலே விம்மும் குரலும், வேதனையின் ஓலமும் ரஸியாவின் பக்கத்திலே யிருந்து மெள்ளக் கிளம்பி வந்து அனைவரையும் அவளையே பார்க்கும் வண்ணம் ஈர்த்துக் கொண்டிருந்தது.

ஆம்! ரஸியா இடையிலே அழுதாள். 'தனக்கும் இப்படி ஒருக் காலமா! வாழ்ந்தவருக்கு வீழ்ச்சியும் எங்கோ கிடந்ததுகளுக்கு ராஜரீகமும் வகையற்றவருக்கு செங்கோலாட்சியுமா கிடைக்க வேண்டும்! அதன் பலனுய் தன்வாழ்வும் தன் நிலையும்தானு பாதிக்கப்பட வேண்டும்—பறிக்கப்பட வேண்டும்! என்ற உள்ளக் கவலை அவளின் கண்ணீரை மடமடவென்று வழிந்தோடச் செய்தது. அழுதாள் கோவெனக் கதறினுள் ரஸியா!

பள்ளிவாசற் தலைவரோ பதறியோடி வந்தார். இஸ்லாமியப் பெருமக்களோ குழப்பமடைந்தனர். வேதனை கொண்டனர். ஓம்ராக்களும் பிரபுக்களும் கூர்ந்து கவனித்தனர். மந்திரிப் பிரதானியரோ சித்தம் சோர்ந்தனர்.

ஆனுல் இளவரசி ரசியாவோ—இந்த நேரத்தில்தான் தன் கன்னத்திலே வழிந்தோடும் கண்ணீரைத் தன் மென் துகிலால், மெள்ள துடைத்துக் கொண்டு தழதழத்த குரலிலே பேசலானுள், (தொடரும்)

நகரசபைகளைக் குறித்து தி. மு. கழக பொதுச் செயலாளர்

நகராட்சி மன்றங்களுக்கும் மக்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும். மக்கள் தாங்களே நகரமன்றத்தில் பேசுவதற்குப் பதிலாக சிலரை நியமித்து, அவர்களுக்கு தங்கள் வாக்குரிமைகளைத் தந்து, 'நீ சென்று எங்களுக்குப் பதிலாக அங்கே பேசு' என்று அனுப்பிய இடம்தான் நகர மன்றம்; மன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்கள் திறமைசாலிகளாகவும், அறிவாற்றல் உடையவர்களாகவும் இருக்க வேண்டும்,

சிற்றூர் மன்றம், பேரூர் மன்றம் மாவட்ட ஆட்சி மன்றம்—முதலிய மன்றங்கள் யாவும் செய்து வைக்கப்பட்ட சட்டங்களை நிறைவேற்றுவதற்குரிய இடங்களே; ஆனுல் சட்ட மன்றங்களில் கட்சிகள் தாங்கள் கொண்டுள்ள கருத்துக்களை சட்டமாக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அடிப்படைக் கொள்கைகளை சட்டங்களாக நிறைவேற்றும் இடம் சட்ட மன்றங்களும், பாராளு மன்றங்களுமாகும். ஆனுல் சிற்றூர், பேரூர், நகராட்சி, மாவட்ட ஆட்சி மன்றங்கள் ஆகியவற்றின் வேலை சட்ட பார்ாளுமன்றங்களால் செய்து வைக்கப்பட்ட சட்டங்களை நிறைவேற்றுவதே.

நகரத்திற்கு வசதி செய்து தருவது அவற்றின் வேலை; கொசுக்கள் பரவாமல் தடுக்க வேண்டுமென்ருல் அதற்கு கட்சி வேறுபாடு வேண்டியதில்லை, காங்கிரஸ் கொசு — கம்யூனிஸ்டு கொசு—கழகக் கொசு—லீக் கொசு என்ற வேறுபாடில்லை, ஆகையால் எல்லா கட்சிக்காரர்களுமே இந்த திட்டத்தை கட்சி வேறுபாடின்றி ஏற்றுக்கொள்வார்கள், அதுபோலவே விளக்குப் போடும் திட்டம் கொண்டுவந்தால் எல்லோருமே ஒப்புக்கொள்வர். ஏனென்ருல் விளக்குகளில காங்கிரஸ் விளக்கு—கம்யூனிஸ்டு விளக்கு—கழக விளக்கு—லீக் விளக்கு என்று வேறுபாடில்லை ஆகவே கட்சி வேறுபாடின்றி நகரசபை உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க வேண்டும்,

நகர சபையில் ஒரு பிரச்னையைப் பற்றி கட்சியாகப் பிரிந்து விவாதிக்க வேண்டுமே தவிர, முதலிலேயே கட்சியாகப் பிரிந்து தேர்தலில் நின்று வரக் கூடாது. அவ்வாறு முதலிலேயே வேற்றுமை ஏற்பட்டால் ஒருவருக்குள்ள மனமாச்சரியம், கண் சிவப்பு, கடைசி வரை இருக்கும். நகர மன்றத்தின் வேலை ஒழுங்காக நடைபெருது.

—இவ்வாறு 28-8-55 மாலை 8 மணிக்கு புதுக்கோட்டை நகரசபையினர் தமக்களித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப்பேசுகையில் தி மு. கழ பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டார்.

நண்பர்கள் நலவுரிமைச் சங்க கட்டிட நிதிக்காக

எழும்பூர் மியூசியம் தியேட்டரில்

17—9—55 சனி மாலை 6-30 மணியளவில்

ஆர். எல். லிங்கராஜ், புகழேந்தி, டி. வி. வேலய்யா தோழியர் டி. இந்திரா, எ. எம். மோகனு, சுலோசனு மற்றும் பலர் நடிக்கும்

மூன்று இரவுகள்

தோழர் ஆர். ஜார்ஜ் தீட்டிய இணையற்ற நாடகம்

டைரக்ஷன் ஆர். எல், லிங்கராஜ்

பாடல்கள் கவி கா. மு. ஷெரீப், அ. மருதகாசி

எஸ். எம். துரைராஜ, தலைவர்

ஜி. இராஜரத்தினம், செயலாளர்

கட்டணம் : ரூ. 5, 3, 2, 1.

அழகர் ஓர் அதிசயப்பேர்வழி

காலம் : காலை சுமார் 10 மணி.

இடம் : புலவர் குழந்தையின் இல்லம்.

பாத்திரங்கள் : புலவர் குழந்தை, நண்பர் அழகர், புலவர் மகன் மணி வண்ணன்.

அழகர் : (வீட்டில் நுழைந்து கொண்டே) நமஸ்காரமுங்க!

புலவர் : வாங்க, வாங்க, வணக்கம்!

மணிவண்ணன் : வாங்கண்ணா! வணக்கம்! 'என்று தான் படித்துக் கொண்டிருந்த திருக்குறளை மூடிவிட்டு அழகர் அருகே வந்து) 'இன்று என்ன காரியம்?

புல : வேறென்ன? பொழுது போக்குக் காகத்தான் ஏதாவது பேசிப்போக வந்திருப்பார்! (அழகரைப் பார்த்து) இல்லையா அழகர்?

அழ : ஐயா! அதற்காகவல்ல நான் வந்தது இன்று! பயனுள்ள வற்றைப் பற்றி ஏதாவது தெரிந்து கொள்ளலாம் என்று தான் வந்தேன்:

புல : அப்படியா பெருமகிழ்ச்சி, இது சம்பந்தமாக நீங்கள் வந்ததுப் பற்றி!

புல : மணி! அம்மாவிடம் போய் மூன்று குளிர்ந்த நீர் மோர் கொண்டு வரச் சொல்!

மணி : சரி அப்பா!

(மணி போகிறான்)

(மூவரும் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு மோரைச் சிறிது சிறிதாக குடித்துக் கொண்டு உரையாடிக் கொண்டு இருக்கின்றனர். மணிவண்ணனும் சிற்சில நேரங்களில் உரையாடலில் பங்கு கொள்கிறான்.

புல : நாம் இன்று எதைப்பற்றிப் பேசலாம் அழகர்? நீங்கள் ஏதாவது இதைப் பற்றித் தான் பேசவேண்டு மென்று திட்டம் போட்டிருக்கிறீர்களா என்ன?

அழ : அப்படியொன்று மில்லை! ஆனால் மொழி சம்பந்தமாக—தமிழ் பற்றி கொஞ்சம் 'டிஸ்கஸ்' பண்ணலாம் ஏதேனும்வேறு காரியமிருந்தால் தள்ளிப் போட்டுக் கொள்ளலாம் பேச்சை!

புல : ('தமிழ்' என்ற சொல்லைக் கேட்டதும் ஏதோ ஒருவிதம் உணர்ச்சி மேலிட்டவராய்) 'தமிழ் பற்றி' என்றீர்கள் ஆனால் என்னென்னமோ கூறுகின்றீரே, என்னய்யா இது? எதைப் பற்றிப் பேசுவது இப்போது? நீங்கள் பேசுவதிலிருந்து பார்த்தால் தமிழைப் பற்றித் தர்க்கம் செய்வதாகத் தெரிய வில்லையே! என்னடா வென்றால் வரும்போதே 'நமஸ்காரம்' என்றீர்கள், நானும் நீங்கள், ஏதாவது உறைப்பாக உண்டிருப்பீர் என்றிருந்தேன். காரத்தின் கடுமையால்தான் ஒருவேளை 'நமஸ்-காரம்' என்றீர்களோ என்று! இப்போது என்னடா வென்றால் 'டிஸ்கஸ்' பண்ணலாம் என்றீர்கள். தமிழ் பேசுவதாகத் தெரியவில்லையே!

அழ : அப்படியானால் நான் ஒரு சில வேளைகளில் வேற்று மொழி வார்த்தைகளைக் கலந்து பேசுவதால் தமிழில் எனக்குப் பற்று இல்லை. தமிழில் பேச விருப்பமில்லை என்று எப்படி ஐயா கூறலாம்? எதையும் நன்றாக ஆலோசித்துத்தானே முடிவு கட்ட வேண்டும்; இல்லையா?

புல : அழகர்! தங்களுக்குத் தமிழில் பற்றில்லை—தமிழில் பேச விருப்பில்லை— என்றல்ல நான் கூறினது! ஆனால் 'இதே

பொன்-மாரி

முறையை நாம் செய்கையில் கையாண்டு கொண்டே போனோமானால் தமிழுக்கு என்றைக்காவது ஒருநாள் ஆபத்து நேரிடுமே என்றுதான் அஞ்சுகிறேன்.

ஏன் சமீபத்தில் நம் சென்னைக் கல்வி அமைச்சர்கூட ஒரு பள்ளியில் சொற்பொழிவாற்றும்போது கண்டித்திருக்கிறார். அதாவது படித்தவர்கள் தமில் பேசும் போது ஆங்கிலச் சொற்களையும் பிற மொழிச் சொற்களையும் கலந்து பேசுகிறார்கள். ஆனால் கடிதங்கள் எழுதும்போது மட்டும் தூய தமிழில் எழுதுகிறார்கள். இவர்கள் பேசும் போதும் இம்முறையைக் கைகொள்ள வேண்டும். இப்படியே இவர்கள் பேசிக் கொண்டே போனால் தமிழுக்கு என்றாவது ஒருநாள் தீங்கு நேரிடும்' என்று.

அவ்வளவு ஏன்? நண்பர்களிருவரும் பேசிக் கொண்டனர்.

முதல்வர் : ஏன் ப்ரதர் எஸ்டர்டே பீச்சுக்கு வர்லலே?

இரண்டாமவர் : வர்லாம்னு தான் ப்ரதர் ஸ்டார்ட் பண்னேன். ஆனா பீமேல்ஸல்லாம்வந்தால், நான்சென்ஸ்ன்ட்டு அதை ஸ்டாப் பண்ட்டேன் ப்ரதர்!' என்றார்.

எப்படி இருக்கிறது போக்கு?

கடற்கரைக்கு நேற்று ஏன் வரவில்லை என்று வினவினார் ஒருவர். அதற்குப் பெண்களெல்லாம் வந்தால் நன்றாக இருக்காது என்று நிறுத்தி விட்டாராம்' என்றார் மற்றவர்,

இதைத் தமிழில் பேச முடியவில்லையாம் நண்பர்கள். இதற்காகத்தான் கூறினேன்! அதுமட்டுமல்ல. ஒருமொழி தெரிந்திருக்கும்போது அதே மொழியில்தான் பேச வேண்டும் மற்றவர்களிடமும் — அதுவும் அந்த மொழி தெரிந்தவர்களிடம். பார்க்கப் போனால் மாற்று மொழிக்காரர்கள் அனைவரும் பிறரிடத்தில் அதாவது அவர்கள் மொழி தெரிந்தவர்களிடத்தில் நேராக— எதுவும் கூச்சமின்றிப் பேசத் துவங்குகிறார்கள். ஆனால் நம்மைப் போன்ற தமிழர்கள் என்னவென்றால் தமிழில் பேசுவது இல்லை. ஏனென்றால் தமிழில் அவ்வளவாகத் தெளிவாகப் பேசத் தெரியாதாம்! தமிழை மறந்ததாகக்கூட கூறுகிறார்கள் பற்பல நேரங்களில்! ஆனால் பாரதியாரோ 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனியாவதெங்கும் காணோம்' என்றும் பாரதிதாசனோ 'அன்பிலா நெஞ்சில் தமிழில் பாடி நீ அல்லல் நீக்க மாட்டாயா?' என்றும் கூறியுள்ளனர். தமிழை வளர்க்கிறீர்களா நீங்கள்? வளர்க்கிறார்களா உங்களைப் போன்றவர்கள்? இல்லையே!

அழ : சரி ஐயா! இனி நான் கண்டிப்பாகத் தமிழிலேயே பேசுகிறேன். என்னால் முடிந்தவரை நான் வேற்று மொழி வார்த்தைகளைப் புகுத்த மாட்டேன் நம் புனிதமான தமிழில்!

புல : ஆமாம். கூடுமான வரையில் கண்டிப்பாகப் புகுத்தக் கூடாது. அப்படிச் செய்தால் தமிழ்த் தாய்க்கு நாம் பெரிதும் கடமைப் பட்டுள்ளோம். அதற்கான வழிகளுக்கு எவ்வளவோ தமிழ்க் காவியங்கள் மலிந்து கிடக்கின்றன. அவைகளைப் புரட்டுங்கள், அவ்வளவுக்கு வேண்டாம். திருக்குறளைப் படியுங்கள்—திரும்பத் திரும்பப் படியுங்கள் தெரிந்து கொள்வீர்கள் தெரியாதனவற்றை! புரிந்து கொள்வீர்கள் புரியாத புதிர்களை யெல்லாம்!

அழ : நிரம்பவும் நன்றி! தவறான எண்ணத்திலிருந்து தவிர்த்து விட்டீர்கள் என்னை! வரட்டுமா! வணக்கம் (என்று புலவருக்கும், புலவரின் துணைவியாருக்கும், மணிவண்ணனுக்கும் செலுத்திவிட்டு வெளியில் வைக்கப்பட்டிருந்த தனது கால் சுவடிகளை மாட்டிக் கொண்டு தம் இல்லம் நோக்கிப்புறப்பட்டார்.)

அழகர் ஒரு அதிசயப் பேர்வழி என்று எண்ணிச் சிரித்துக்கொண்டே தம் பணியில் ஈடுபட்டார், புலர் குழந்தை!!.......

பிறப்பு

முற்போக்கு எழுத்தாளர் தோழர் 'கௌதமன்' அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் திருமதி சாரதா அம்மையார் அவர்களுக்கு முதன் முறையாக 9-8-55 அன்று குடியாத்தத்தில் ஓர் பெண் மகவு பிறந்தது. 27-8-55-ம் நாளன்று பெயர் சூட்டு விழாவும் இனிது நடந்தேறியது. முன்னாள் போலீஸ் அதிகாரி திரு ரங்கசாமி அவர்களால் குழந்தைக்கு மேகலா எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக திராவிடன் வளர்ச்சிக்கு ருபாய் ஒன்று வரப்பெற்றோம்.

*

6—8—55 தாராபுரம் தோழர் கே. பழனியப்பன் — தில்லியம்மாள் அவர்களின் பெண் குழந்தைக்கு செந்தமிழ்ச் செல்வி என்று பெயரிட்டதின் நினைவாக திராவிடன் வளர்ச்சிக்கு ருபாய் ஒன்று அன்பளிப்பு தரப்பட்டது.

*

திருவண்ணாமலை தி. மு. க. அனுதாபியும் தென்பகுதி ரயில்வே மென்ஸ் யூனியன் திருவண்ணாமலை கிளை செயலாளருமான செ குப்புசாமி மனைவி ஆண்டாள் அம்மைக்கு 17—8—55 புதன்கிழமை மாலை 5-45-க்கு பெண் மகவு பிறந்தது. தாயும் குழந்தையும் நலம். இதன் நினைவாக திராவிடன் வளர்ச்சிக்கு ருபாய் ஒன்று தரப்பட்டது.

திருமணங்கள்

*

29-6—55-ல் தாராபுரம் தோழர் வி. எஸ். மாணிக்கவாசகம் அவர்களுக்கும் ஒட்டஞ்சத்திரம் தோழியர் சாரதா அவர்களுக்கும் ஒட்டஞ்சத்திரம் மணமகள் இல்லத்தில் திருமணம் சிறப்புடன் நடைபெற்றது. அதுசமயம் உள்ளூர் வெளியூர் பிரமுகர்கள் ஏராளமாக வந்திருந்து சிறப்பித்தனர். திருமண நினைவாக நல்ல கொள்கையை நாட்டிலே பரப்பும் திராவிடன் வளர்ச்சிக்கு ருபாய் ஒன்று தரப்பட்டது.

*

காட்டுப்பாளையம் தோழர் ஆர். சின்னசாமி அவர்களுக்கும் வேலங்காட்டுப் புதூர் என்ற சேனாதிபதிக் கவுண்டன் புதூர் தோழியர் மீனாம்பாள் அவர்களுக்கும் பழய கோட்டை பட்டக்காரர் திருவாளர் நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் எம். எல். சி. அவர்கள் தலைமையில் ஊத்துக்குழி ஜமீன்தார் அவர்கள் முன்னிலையிலும் 30—6—55 தேதி காலையில் திருமணம் சிறப்புடன் நடைபெற்றது. அதுபோது சென்னை போலீஸ் இலாகா அதிகாரி (D. I. G.) குப்புசாமி அவர்களும் மறைந்த மாவீரர் தோழர் என். அர்ச்சுனன் அவர்களுடைய வாழ்க்கைத் துணைவி பார்வதி அம்மையார் அவர்களும் அர்ச்சுனன் தாயார் அவர்களும் மற்றும் வெளியூர் பிரமுகர்கள் பலரும் வந்திருந்தனர். திருமணத்தின்போது மணமக்களுக்கு ஏராளமான பரிசுகள் பல தோழர்களாலும் தாய்மார்களாலும் வழங்கப்பட்டது. திருமணம் நிகழ்ந்தவுடன் தாராபுரம் திராவிட முன்னேற்றக் கழக வட்டக்குழு துணை செயலாளர் மீனாட்சிபுரம் தோழர் எஸ். வி. சர்க்கரை அவர்களால் கருத்து நிறைந்த வாழ்த்துரை வாசித்தளிக்கப்பட்டது. திருமண நினைவாக மூடக் கொள்கையை முறியடித்து நாட்டுக்கு நல்ல கொள்கையை நீட்டித் தரும் திராவிடன் வளர்ச்சிக்கு ருபாய் ஒன்று அன்பளிபபு தரப்பட்டது.

*

தாராபுரத்தைச் சேர்ந்த எல்லப்ப நாய்க்கன்னூர் தோழியர் மணிமேகலை அவர்களுக்கும் வேட்டக்காரன் புதூர் தோழர் ராமசாமி அவர்களுக்கும் 13—7—55-ல் மணமகள் இல்லத்தில் எவ்வித மூடச்சடங்கும் இல்லால் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது. அதன் நினைவாக சுயமரியாதை கொள்கையை நாட்டிலே பரப்பும் திராவிடன் வளர்ச்சிக்கு ருபாய் ஒன்று அன்பளிப்பு தரப்பட்டது.

*

31—8—55 காலை 9-30 மணிக்கு தோழர் டி. நந்தன்—தோழியர் சாரதாம்பாள் வாழ்க்கை ஒப்பந்தவிழா செங்குன்றம் அடுத்த புழல் கிராமம் காளி தெருவில் திரு. கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தியும் சீர்திருத்த திருமணத்தின் அவசியம் பற்றியும் தோழர் என். வி. நடராசன் அவர்கள் சொற்பொழிவாற்றினார். மணமக்கள் சார்பில் 'திராவிடன்' இதழுக்கு ரு 1 நன்கொடை அளிக்கப்பட்டது.

வரலாற்றை மறைக்க முயலும் விசித்திர மனிதர்!

சண்முகம் குலசேகரன்

நாம்—திராவிட இயக்கத்தினர்—"திராவிட நாடு திராவிடருக்கே!" என்ற நமது இலட்சிய முழக்கத்தை கடந்த பல ஆண்டுகளாக மக்கள் மன்றத்திலே பறைசாற்றி வருகின்றோம். சரித்திர சான்றுகளையும், இலக்கிய எடுத்துக் காட்டுகளையும், பழக்கவழக்க பண்பாட்டு வேறுபாடுகளையும், ஆட்சியின் வஞ்சகத்தையும் நாம் ஆதாரங் காட்டிப் பேசியபோது — எழுதியபோது —இல்லை, இல்லை! இவர்கள் கூறுவது அத்தனையும் பொய்! என்று 'உண்மை' உணர்த்தி எதிர்த்தவர்கள் ஒருவரும் கிடையாது. 'கூலி' நோக்கோடு—அடிமைப் புத்தியோடு—பழைய பாச, நேசத்தோடு— நம்மை நமது கொள்கையைக் குறை கூறியவர்கள்—மறுக்க முயன்றவர்கள் காட்டிய ஆதாரங்கள் எல்லாம் மலைக்கோட்டையை உடைக்கும் மண் உருண்டைகளாகவும் மயிலின் முன் ஆடும் வான் கோழிகளாகவுமே ஆயின. அவர்களை மக்கள் மன்றம் வெறுத்து ஒதுக்கியே வருகின்றன.

அரசியலில் உயர்ந்தவர்களும் 'பெரியவர்கள்' நிலை பெற்றவர்களும் தங்களது அந்தஸ்தையும் பெருமையையும் பாதுகாப்பதற்காக—நீடித்துப் பெறுவதற்காக நமது தன்னாட்சிக் கொள்கை மண்ணாக வேண்டும் என்று மனதார விரும்பினர்: நம்மைப்பற்றிப் பேசாமலேயே மௌனம் சாதிப்பதன் மூலம்—அலட்சியப்படுத்துவதின் மூலம்—நாம் அழிந்துவிடுவோம் என்றெண்ணினர். தோல்வி கண்டனர். வேறு முறைகளைக் கையாள முயன்றனர், நமது கொள்கையைக் கொல்ல!

நமது உரிமைக் குரலை நாடு கேட்கக் கூடாது என்று பேச்சுக்குத் தடை செய்தார்கள், 144 வீசி! தடை மீறப் பட்டது. குண்டாண்தடியால் பேசினர். நமது எழுத்தை மக்கள் படிக்கக் கூடாது என்று நூல்களுக்குத் தடை; பத்திரிகைகளுக்கு 'ஜாமீன்'; எழுத்தாளர்களுக்குச் சிறைதண்டனை; திரைப்படத் தணிக்கை! இப்படியெல்லாம் முயன்று பார்த்தனர் அரசினர். அவர்களது நடவடிக்கைகள், நமது மாநாடுகளுக்கு லட்சோபலட்சம் மக்கள்கூடி முழங்குகிற அளவுக்கு நம்மை வளர்த்தன.

பட்டிதொட்டிகளிலெல்லாம் நமது கொள்கை முழங்கின, கொடிகள் பறந்தன, கழகங்கள் தோன்றின! நம்மைத் தொலைக்கத் துப்பாக்கியின் துணைநாட ஆரம்பித்தனர் துரைத்தனத்தார், சுயமரியாதை இயக்க வரலாற்றிலேயே நம்மை அடக்கத் துப்பாக்கியின் துணையை அரசினர் நாடினதே திராவிட முன்னேற்றக் கழகம் நடாத்திய மும்முனைப் போராட்டத்தின் போதுதான் என்று நமதருமை அண்ணா கூறியதைப் போல 53-ம் ஆண்டில் நடைபெற்ற அறப்போரை அடக்க துப்பாக்கி வேட்டுக்கள் முழங்கின—தூத்துக்குடியிலும் கல்லக்குடியிலுமாக. தோழர்கள் பலர் சாய்ந்தனர் பிணங்களாக! 'கொசுவைப் போல் கொன்றுவிடுவோம்' 'மூட்டைப் பூச்சியை நசுக்குவதுபோல் நசுக்கிவிடுவோம்' என்று மிரட்டினார் ராஜகோபாலாச்சாரியார் ராஜ்ய முதன் மந்திரியாக! அழிந்தா போய்விட்டோம் நாம்! அல்ல அல்ல, வளர்ந்துள்ளோம். உலக நாடுகளின் செவியில் நமது உரிமைக் குரல் ஒலிக்க ஆரம்பித்தன. அமெரிக்க நாட்டு இதழான 'நியூயார்க் டைம்ஸ்' (Newyork Times) நமது திராவிட பூர்வீக ஆராய்ச்சி வரலாற்றையும் குறிப்பிட்டு நம்மைப்பற்றி விமர்சித்தது. 'காமன்வெல்த்' நாடுகளுக்காக வெளியிடப்படும் 'வட்ட மேஜை' (Round Table) போன்ற ஆங்கில இதழ்களும் நம்முடைய இலட்சியம் குறித்து எழுத ஆரம்பித்தன. நாடு நம்மை உற்று நோக்கிக் கொண்டிருக்கச் செய்தன.

அடக்குமுறைகளை நம்மீது ஏவ, ஏவ நாம் வெட்டப்பட்ட மரம் தளிர் விடுவது போன்று, தட்டப்பட்ட பந்து துள்ளிப் பாய்வதைப்போல நாம் மென்மேலும் வளர்ந்தோம் — வளர்கிறோம்; ஆனால் நம்மை அழிக்கத் திட்டமிட்டவர்—'சரித்திரத்தில் இடம் பெறச் செய்கிறேன்: பார்!' என்று நம்மைப் பார்த்துச் சபதம் கூறிய ஆச்சாரியார்—இன்று பரிதாப நிலையில் 'பிளாட்பார' விலாச தாரராக மாறும் கதிக்குத்தான் ஆளாக நேரிட்டது.

இன்று எங்கு பார்த்தாலும், எத்திக்கு நோக்கினாலும் நமது கொள்கை —தென்னாடு தனிநாடாக வேண்டும் என்ற கோரிக்கை — பலவகைகளிலே பேசப்படுகின்றதைக் காணலாம். காங்கிரஸ் தோழர்கள் (கம்யூனிஸ்ட் காம்ரேடுகளும் கூடத்தான்!) தென்னாட்டிற்கு டில்லி செய்யும் வஞ்சகத்தைச் சுட்டிக் காட்டி, நம்மைவிடச் சிறிது காரசாரமாகக் கண்டிக்கின்ற நிலையை இன்று காண முடிகின்றது.

'திராவிட இயக்கத்தை எப்படி ஒழிப்பது இனிமேல்! அவர்களது பிரிவினைக் கொள்கையைப் பொசுக்குவது எவ்வெவ் வழிகளால்!' என்று ஆட்சிபீடத்தினர் ஆலோசித்து வருகின்றனர். புதிய புதிய முறைகளில் நம்மை—நமது இலட்சியத்தைப் புதைத்துவிடப் பகற்கனவு காண்கின்றனர். ஒரு சமயம் நம்மைப்பற்றி வாய் திறவாதவர்கள்—ஒரு வரி கூட எழுதாதவர்கள் எல்லாம் இன்று பேச எழுத ஆரம்பித்திருக்கின்றனர். புகழ்ந்து அல்ல, திட்டி—கண்டித்து! 'ஆரியராவது திராவிடராவது!' என்று அங்கலாய்க்கிறார் ஒரு 'பட்ட' கவி. 'நாட்டைத் துண்டாடும் நாசகாலர்கள்' நாஸ்தீகம் பேசும் நயவஞ்சகர்கள்' 'காட்டிக் கொடுப்பவர்கள்' என்றெல்லாம் நமக்குப் பட்டஞ் சூட்டி பொதுமக்கள் நம்மை வெறுத்து ஒதுக்க வேண்டும் என்ற வீண் ஆசையில் வேலை செய்து வருகின்றனர் பலர்.

'வடநாடு — தென்னாடு' என்ற உணர்ச்சி வலுவடைவதைக் கண்ட இந்திய 'ஜனாதிபதி' ராசேந்திரப் பிரசாத் தென்னாட்டில் ஒரு ராஷ்டிரபதி நிவாஸை—இல்லை, இல்லை! ராஷ்டிரபதி நிலையத்தை (தமிழர்களைத் திருப்திப்படுத்தவாம்!) ஏற்படுத்திப் பேதம் நீக்கப் பாடுபடுகிறார்! திராவிட நாடு கோரிக்கை பகற்கனவு. என்று உயர்ந்த, தொனியில் கண்டிப்பதின் மூலம் திராடவி இயக்கத்தை ஒழித்து விடலாம் என்று கனவு காணுகிறார். அடிக்கடி கனவில் திரிகின்ற மந்திரி சுப்பிரமணியனார்!

வடஇந்தியர் தென்னிந்திய மொழிகளில் ஒன்றைக் கட்டாயமாகக் கற்க வேண்டும். என்று பேச்சளவில் சமரசம் புரிகின்றார் இன்னொரு மத்திய மந்திரி. தென்னாட்டில் வேர் ஊன்றிவிட்ட திராவிட இயக்கக் கருத்துக்களை பிடுங்கி எறிய இன்னும் எத்தனையோ 'ஆத்மாக்கள்' எப்படி எப்படி யெல்லாமோ முயன்று வருகின்றனர். அவர்களில் இக்கட்டுரைக் கதாநாயகரான ஆர். வீ. கிருஷ்ணய்யரும் ஒருவராவார்.

"பாரத நாட்டின் வரலாற்றைத் துருவி ஆராய்ந்து பார்த்தால் ஒரு போதும் தென்னாடு இந்திய ஆட்சியிலிருந்து தனித்திருந்ததில்லை" எத்தனையோ ஆராய்ச்சிகள் நடத்தியபின் புதிய உண்மையைக் கண்டு பிடித்ததைப் போலக் கூறுகிறார் இந்த சரித்திர கொலம்பஸ்—கிருஷ்ணய்யர்! சென்னை சட்ட சபையின் முன்னாள் செயலாளராக இருந்தாரே அவர்தான்! பேசிய இடம் எங்கேயோ என்றிருந்தால்யாரும் கவலைப் படப்போவதில்லை.—(அய்யர் பேசுவதில் ஆச்சர்யமென்ன என்று இருந்துவிடலாம்.) ஆனால் மேற்கண்ட பொய்யான மெய்யைக் கூறிய இடம் சாதாரண இடமல்ல, செனட்ஹவுஸில்! —சென்னைப் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவின்போது!

திராவிடநாடு — தென்னாடு — பிரிவினைக் கோரிக்கை வலுவடைகின்றதை மனதில் கொண்டவராய் 'அந்த எண்ணத்திற்கு இடம் கொடுக்கக் கூடாது—இந்தியாவின் ஐக்கியத்தைக் குலைக்கக் கூடாது' என்று பல்கலைக்கழக மாணவர்களுக்கு புத்தி கூறுவதற்காகவே மேற்கண்ட அபூர்வ ஆராய்ச்சியை வெளியிட்டிருக்கிறார். அறிவில் சிறந்தவராக இருப்பாரேயானால் 'திராவிடம் வடநாடுடன் சேர்ந்து ஐக்கியமாகயிருப்பதினால் என்னென்ன நன்மைகள்! பிரிந்து தனி நாடாக வாழ்வதினால் என்னென்ன தீமைகள்!' என்று வரையறுத்து கூறி விளக்கியிருக்க வேண்டும். அம்முயற்சியில் ஈடுபடாது 'பொய்யான மெய்யுரைகளைப்' பேசுவானேன்.

ஆதாரம்காட்டமுடியுமா? என்றாவது இந்திய துணைக்கண்டம் ஓரேஆட்சியின் கீழிருந்தது என்று! வேதகாலமுதல் (அதற்கு முன்னர் உள்ள காலத்திற்கு சரித்திர ஆதாரங்கள் இல்லை) வெள்ளையர் காலம் வரை தென்னாடு—திராவிடம்—வடவர் ஆட்சிக்கு உட்பட்டது கிடையாது. வெளியார்களது அத்தனை படையெடுப்புகளும் அவர்கள் அமைத்த சாம்ராஜ்யங்களும் தென்னாட்டை பாதித்தது கிடையாது. தென்னாட்டு அரசர்கள் தங்களுக்குள் ஒருவரோடொருவர் சிறுசிறு சண்டைகள் நடத்தி வந்திருக்கின்றனர் என்றாலும் வடவர் ஆதிக்கத்தை விரும்பினரல்லர், ஒன்றுபட்டு நின்றிருக்கின்றனர் வெளியாரோடு போரிட்டு வெல்ல!

மகாபாரத இராமாயணக் காதைகளில் கூட இந்தியா ஒரே ஆட்சியின் கீழ் இருந்ததாகக் கூறப்படவில்லை. மாறாக 'தென்னகத்தில் தனி மன்னர்கள் ஆட்சி புரிந்தனர்—தனிக் கலாச்சாரத்தோடு—பண்பாட்டோடு, அவர்கள் வடவர்களது கொள்கைகளை விரும்பவில்லை. வடக்கிலிருந்து சென்றவர்களது யாக வேள்விகளை அழித்து விரட்டினர்' என்றெல்லாம்தான் கூறுகின்றனவே ஒழிய 'ஐக்கியம்' போதிக்கவில்லை. மாபாரதயுத்தத்தில் பாண்டவர்களுடன் சிநேகமாக இருந்தவன் ஒரு பாண்டிய அரசன் என்று தனது தரப்புக்குச் சான்றாகக் கூறுகிறார் கிருஷ்ணய்பர். இருந்திருக்கலாம் அவர்களோடு மட்டுமென்ன! வேறு பல நாட்டு மன்னர்களோடு நட்பு காட்டியிருக்கின்றனர் தென்னக அரசர்கள். இலங்கை மன்னன் தமிழ் நாட்டில் நடந்த விழாக்களுக்கு வருகை தந்திருக்கிறான். சீன நாட்டுத் தூதர்கள் இங்கு வந்து போயிருக்கிறார்கள். யவன நாட்டு வீரர்களை தன் படையில் சேர்த்திருந்தானும் நெடுஞ்செழியன். பல நாடுகளோடு வாணிப நட்பு கொண்டிருந்தனர். இவைகளை யெல்லாம் காட்டி எல்லா நாடுகளும் ஒரே ஆட்சியின் கீழ் இருந்தன என்று கூற முடியுமா?

தெற்கும் வடக்கும் ஒரே அமைப்பில் இருந்தன என்பதற்கு ஒரு சான்று கூடக் காட்ட முடியாது வரலாற்றில். தனித்தனியாக ஆட்சி புரிந்தன என்பதற்கு ஆயிரம் சான்றுகள் காட்ட முடியும். இது தெரியாததல்ல கிருஷ்ணய்யருக்கு! வரலாற்றை மறந்துவிடவில்லை அவர்! மறைக்கின்றார்.

'உலகமே என் நாடு' என்ற குறிக்கோளை மனதில் கொள்ள வேண்டும் என்கின்றார். மகிழ்ச்சியோடு வரவேற்கின்றோம் ஒரே உலகம் (One World) என்ற வெண்டல் வில்கியின் கொள்கை படிப்பதற்கு நன்றாக இருக்கிறது. ருசியாக இருக்கிறது! ஆனால் உலகு ஏற்றுக் கொண்டுள்ளதா! அப்படியானால் ஏன் தனித்தனி நாடுகளாக இருக்கின்றன! ஒரே உலகு என்ற கொள்கையை உலக நாடுகள் கடைப்பிடிக்க மறுப்பது வெறுப்பு எண்ணத்தினால் அல்ல; முடியாத காரணத்தினால்தான். நாம் —தென்னாட்டவர்கள் — அரசியல் உரிமையிலே—ஆளும் அதிகாரத்திலே—பொருளாதார நிலையிலே—வடநாட்டவரால் அடிமை படுத்தப்பட்டு, வடவரின் 'மார்க்கெட்'டாக— காலனியாக திராவிடம் இருக்கின்றவரை 'ஏக இந்தியா' என்ற ஏமாற்று வித்தையையோ —ஒரே உலக ஆட்சிக் கொள்கையையோ ஏற்றுக்கொள்ள முடியாது. 'உலகமே என்நாடு' என்றெண்ணவேண்டும் என்ற கிருஷ்ணய்யரின் அறிவுரை நமக்குப் புதிதல்ல. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது தமிழர்தம் பண்பாடு. அதற்காக நன்மை சிறிது கூட இல்லாத—மாறாக துன்பமும் கேடுகளும் வஞ்சகமும் நிறைந்த 'ஏக இந்தியா' என்ற சூதான அமைப்பை ஏற்றுக் கொள்ள முடியுமா? முடியவே முடியாது,

'திராவிட நாடு திராவிடர்க்கே' என்ற இலட்சியக் கொள்கை வளர்ந்து விட்டது கோபுரத்தைவிட மேலாக. சொல்லடிகளாலும் சூதுத் திட்டங்களாலும் கல்லடிகளாலும் சயமை வேலைகளாலும் குண்டாந்தடி, குண்டு வீச்சுக்களாலும் அடக்குமுறை அம்புகளாலும் அழிக்க முடியவில்லை. அசைக்கக்கூட முடியவில்லை, கிருஷ்ணய்யர் போன்றோரது வஞ்சகப் பேச்சு என்ன செய்யும்! வந்து பாருங்கள் திருச்சியில் நடைபெறயிருக்கும் மாநில மாநாட்டை!

விற்பனைக்குத் தயார்!

- 50 வரலாற்று ஆசிரியர்களின் கருத்துக்களை மய்யமாகக் கொண்டது!
- மாணவர்களின் சிறப்பான பொக்கிஷம்!
- பாலு பிரதர்ஸின் அழகான மூவண்ண முகப்பு!

கிரேக்க மாவிரன்

அலெக்சாண்டர்

தீட்டியவர் : கௌதமன்

பக்கங்கள் 228. : விலை ரூபா 2.

வியாபாரிகளுக்கு 25 சதவிகிதம் கழிவு. முன்பணம் அனுப்ப வேண்டும். தபால் செலவு இனாம்.

கிடைக்குமிடம் :—

பாண்டியன் பதிப்பகம்
16, ரிலையன்ஸ் ரைஸ் மில் தெரு, சென்னை-1

பூங்கோத்துகள் தொடர்ச்சி

யான நிறைவை இன்னும் பெற வில்லை இவர். நாடகத்தின் பல்வேறு அமைப்பு தன்மைகள் வேலனிடம் பூரணமாக செழிக்க வில்லை. நாடகத்திற்காக அவர் தேர்ந்தெடுக்கும் சூழல்கள் பெரும் பாலும் சரித்திர சார்பு கொண்டவையே யாயினும் புதுமை மிக்க தல்ல கதையின் வலிவற்ற அடிப்படை 'ஏனோ தானோ' என்ற போக்கில் நிகழ்ச்சிகளைப் பின்னிச் செல்லுகிறது......காட்சி அமைப்புகள் கருத்தைஅள்ளுவதாயினும் கதையில் மெருகில்லை, ஏனெனில் சரித்திர சம்பவங்கள் அனைத்துமே சொல்லி, சொல்லி சலித்துப் போனவை. 'சாம்பாஜி' ஒன்றே போதும், இதனைப் புரிந்து கொள்ள.

ஆசிரியரின் நாடக பணியிலிருந்து முற்றிலும் மாறுபட்ட சித்தரிப்பு 'இராவணன்' அந்த நாளில் வெளிவந்தும் தகுதியான பெருமையை இது பெறவில்லை! இதனைத்தவிர மற்ற நாடகங்கள் அனைத்தும் ஏறத்தாழ ஒரே பாணியில் அமைந்தவையே. வழக்கமாக சித்தரிக்கும் மென்மையான 'சேதிகளை' தவிர்த்தால் வேலனின் எழுத்துக்கள் புதிய எழிலைத் தேக்கிக் காட்டலாம். 'இப்சனும், பெர்னாட்ஷாவும் தமிழகத்தில் பிறக்கவில்லையே என்ற வேதனை, இளம் மேதைகளை பயன்படுத்திக் கொள்வதில் தடையாக வளர்ந்துவிடக் கூடாது.

மாற்று மொழி நாடகாசிரியன் வந்தால் அவனிடம் 'தமிழ் நாட்டில் நாடகாசிரியர் இனிமேல்தான் பிறக்கவேண்டும்' என்று சொல்வது அப்போதைக்கு அழகாயிருக்கலாம். தானுக எதையாவது புரிந்து கொள்ள வேண்டும். இல்லை பிறர் சொல்லித் தெரிய வேண்டும். இரண்டுமில்லாத மந்த மதியினரைப் பொறுத்தவரை 'தமிழ் நாட்டில் நாடகாசிரியன் பிறக்கத்தான் இல்லை.'

என்ன செய்வது? கிடைத்த செல்வத்தை இரைத்து விட்டு 'வறுமை' பேசும் பித்துமனம் கொண்டோரையும் இந்த நாடு தாங்கிக் கொண்டுதானிருக்கிறது. நாட்டு நடப்பு அத்தகு விசித்திரமான சூழ்நிலையை உருவாக்கிப் போட்டிருக்கிறது. நாடகம் எழுத ஆரம்ப பள்ளிப் படிப்பு கூட தேவையில்லை என்ற அமைப்பில் அந்தக் கலை, மேடையில் கோரமாக்கப்படுகிறது, அடுக்குமொழி ஒரு இயக்கமாக வளர்ந்து விட்டதால் அந்த வளையத்தினுள் சில முட்டாள்களும் புகுந்து தொல்லை தருகிறார்கள்! அடுக்குமொழி வசன அமைப்பு இன்றைய நாடகக் கலையை பெரிதும் களங்கப் படுத்துகிறது. கருத்து, கலை, பண்பு இவற்றையெல்லாம் மண்ணிலே வீசிவிட்டு வெறும் கைத் தட்டலுக்காக எழுதுவோரின் தொகை புழுக்கூட்டமாக குவிந்து விட்டது.

இந்த நிலையில் உருவாகி யிருக்கும் அளவுகோலை வைத்துப் பார்த்தால் வேலன் போன்றாரின் அருமை புரியும். புதிய கலைப் பொலிவைத் தேக்கிக் காட்டா விட்டாலும் வம்சவாரியாக வளரும் கலையை சாகடிக்காது பாதுகாக்கிறார்களே என்று வாழ்த்தத் தான் தோன்றுகிறது.

●

பம்பாய்

●

சௌந்திரபாண்டியனர் பகுத்தறிவு மன்றம்

11—8—55 இரவு 8-மணிக்கு மன்றப் புத்தாண்டு தேர்தல், தேர்தல் அதிகாரி மா. இரா, குறள்தாசன் அவர்கள் தலைமையில் நடந்தது.

கூட்டத்தைத் துணைச் செயலாளர் எ. எஸ், ஆசைத்தம்பி துவக்கி வைத்தார். தலைவர் முன்னுரைக்குப் பின் தேர்தல் நடைபெற்றது. கீழ்க்கண்ட நிர்வாகக் குழு அமைக்கப்பட்டது.

செயலாளர் நாஞ்சில் ராசாமணி, து. செயலாளர் பி. சாமிநாதன், பொருளாளர் டி. வி. துரை.

செயற்குழு உறுப்பினர்கள் : மா. இரா. குறள்தாசன், எ. எஸ். ஆசைத்தம்பி, பி. தேவதாசன், வி. சாலமோன் மா. ஞானடா. வி. டி. சாமி, பி. திருமால், எம். பன்னீரை.

கூட்ட இறுதியில் பம்பாய் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் எஸ். தியாகராசன், சட்டதிட்ட அமைப்புக் குழு செயலாளர் த. மு பொற்கோ ஆகியோர் பழைய நிர்வாகிகளைப் பாராட்டியும் புதிய நிர்வாகிகளை வரவேற்றும் பேசினார்கள்.

15-8-55 மாலை 6-30 மணிக்கு மன்றச் செயற்குழுக் கூட்டம் அன்பகத்தில் தோழர் வின்செண்ட் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தை செயலாளர் மா. இரா. குறள்தாசன் துவக்கி வைத்துப் பேசினார். தலைவர் முன்னுரைக்குப் பின் புதிய நிர்வாகிகளிடம் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டது. அப்பொழுதே பாராட்டு விழாவும் நடத்த வேண்டும் என்று பலதோழர்கள் கேட்டுக் கொண்டதால் பாராட்டு விழாவும் நடைபெற்றது. பொருளாளர் டி. வி. துரை தாயகம் சென்றிருப்பதால் பாராட்டுக் கடிதம் அனுப்புவதென்று முடிவுசெய்யப்பட்டது. பழைய நிர்வாகிகளைப் பாராட்டி தோழர்கள் வடவைக்குயில் பி. தேவதாஸ், வி. சாலமோன், எம். பன்னீரையா ஆகியோர் பேசினர். 'அறிவுக்கு உணவு' என்ற நூல் நிர்வாகிகளுக்குப் பரிசளிக்கப்பட்டது. செயலாளர் மா. இரா. குறள்தாசன், துணைச்செயலாளர் எ. எஸ். ஆசைத்தம்பி ஆகியோர் தமக்களித்த பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசினர். புத்தாண்டுசெயலாளர் ராசாமணி புதிய நிர்வாகிகள் நடந்துக் கொள்ள வேண்டிய முறையைப்பற்றி பேசினர்,

தி. மு. க. துணைத்தேர்தல்.

பம்பாய் தி. மு. க, தாராவி கிளையின் துணைத் தேர்தல் 28-8-55 மாலை சுமார் 7 மணியளவில் 'திராவிடரகத்தில்' தேர்தல் அதிகாரி தோழர் எஸ் வள்ளிநாயகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. துணைச் செயலாளராக தோழர் சு. தங்கவேலன் அவர்களும், பொருளாளராக தோழர் எம், எஸ். கணபதி அவர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். தலைவர் முடிவுரைக்குப்பின் செயலாளர் நன்றி நவில தேர்தல் கூட்டம் இனிது முடிந்தது.

பொய்சேர் தி. மு. க.

21-8-55-ல் மாலை 6-30 மணிக்கு கே.எ. முத்தையா இல்லத்தில் கே. எஸ். சுப்பையா தலைமையில் தோழர் வி. எஸ், பொன்னையா திராவிடப் பண் பாட சொற்பயிற்சி ஆரம்பமாகியது.

முன்னாள் செயலாளர் க. ஆ, குணசேகரன், மலாடு செயலாளர் டி. எ. அழகுமுத்து, பொய்சேர் கழக செயலாளர் சி இரா. அதிவீரன் மற்றும் கழக முன்னணி வீரர்களும் சொற்பெருக்காற்றினார்கள். இறுதியாக தாராவிப் பகுதியில் கோதை ராசன், நமது இயக்க முன்னணிவீரர் 21-8-55-ல் இயற்கை அடைந்ததை குறித்து அனுதாபம் காட்டப்பட்டது.

வழக்கு வாபஸ்

பம்பாய் புத்தர் மறுமலர்ச்சி மன்றத்தின் செயலாளரான தோழர் ஏ. என். கேசவன் அவர்களுக்கு 20-8-55 அன்று மன்ற உறுப்பினர்களால் மகத்தான வரவேற்பும் பாராட்டுக் கூட்டமும் நடத்தப்பட்டது. நா. பா. அரங்கண்ணல் தலைமை தாங்கிப் பேசுகையில் தோழர் கேசவன் எழுதிய நான் விபசாரியா? ஆதிபகவானுக்கு ஆப்பு என்ற புத்தகங்களை ஆபாச புத்தகம் என்று அதன் மேல் அரசியலார் வழக்கு தொடர்ந்து அந்த வழக்கை பின் வாபஸ் வாங்கிக் கொண்டார்கள். இந்த வெற்றியானது தோழர் கேசவனுக்கு மட்டுமல்ல, அவா கொண்டுள்ள கொள்கைக்கும் வெற்றி என்று குறிப்பிட்டார்

வரவேற்பிற்கு தோழர் கேசவன் பதிலளிக்கையில், எனக்களிக்கப்பட்ட வரவேற்புக்கும், நான் எழுதிய புத்தகங்கள் மேல் அரசியலார் வீசப்பட்ட வழக்குவாபஸ் வாங்கிக் கொண்டார்கள் என்பதற்காக பாராட்டும் நடத்தி என்னை இவ்வளவு பெருமை படுத்தும் இம் மன்றததாருக்கு எனது வணக்கம். உரித்தாகுக. பிறவற்றை அடுத்த கூட்டததில் எடுத்துரைக்கிறேன் என்றார்.

தமிழர் முன்னேற்ற மன்றம்

15—8—55 காலை 10 மணிக்கு பம்பாய் ஜோ கேஸ்வரி பகுதியில் தென் ஆற்காடு முன்னேற்ற மன்றத்தின் உறுப்பினர் கூட்டம் பம்பாய் தி. மு. கழகப் பொதுச் செயலாளர் தலைமையில் நடை பெற்றது. தலைவர் முகவுரையில் மன்றத்தின் பொறுப்புகளை விளக்கிப் பேசியபின் தோழர்கள், பொற்கோ. சண்முக அரசன் தமிழர்களின் பண்பு, கடமை, இவைகளைப் பற்றி எடுத்து இயம்பினர்கள். தென் ஆற்காடு முன்னேற்ற மன்றத்தை தமிழர் முன்னேற்ற மன்றமாக்க வேண்டுமென்ற தலைவர் முடிவை உறுப்பினர்கள் ஒப்புக்கொண்டார்கள். த. மு. ம. தலைவர் அப்துல் அஜீஸ் ரூ. 2 பம்பாய் தி. மு. க. பொதுக்குழுவிற்கு நன்கொடையாக பொதுச்செயலாளரிடம் அளித்தார். பின் எ. என். இராமசுவாமி நன்றி நவில கூட்டம் இனிது முடிவடைந்தது,

வருந்துகிறோம்.

பம்பாய் தி. மு. கழக உறுப்பினரும் பம்பாய் தாராவி தாலமுத்து நடராசன் படிப்பக நிர்வாகக் குழு உறுப்பினருமான தோழர் கோதைராசன் அவர்கள் 21-8-55 அன்று உயிர் நீத்தமைக்கு வருந்துவதுடன் அன்னாருடைய குடும்பத்தாருக்கும் உற்றார் உறவினர்களுக்கும் பம்பாய் தாலமுத்து நடராசன் படிப்பகம் தன் அனுதாபத்தை தெரிவித்து கொள்கிறது என்பதை படிப்பகச் செயலாளர். தோழர் பி, செண்பகப்பாண்டியன். அறிவிக்கிறார்.

*

கவுந்தப்பாடி

கவுந்தப்பாடி, அய்யம்பாளையம் தி. மு: கழகத்தின் சார்பில் 8—8—55-ல் தி மு, க. பொதுச் செயலாளருக்கு மாபெரும் வரவேற்பு தரப்பட்டது. கவுந்தப்பாடி சிற்றூராக இருப்பினும் அன்று நகரமாகத் திகழ்ந்தது. வழிநெடுக வரவேற்பு அட்டைகளும் தோரணங்களும் காட்சியளித்தன. பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் 6-30 மணிக்கு கவுந்தப்பாடி வந்து சேர்ந்தார். வாத்தியங்கள் முழங்க தோழர்கள் சூழ அவர் ஊர்வலமாக அழைத்து செல்லப்பட்டார். 7 மணிக்கு திரு எம். சின்னப்பன் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடந்தது. அதுசமயம் தோழர் எஸ், அப்பாவு சிறிய உரை நிகழ்த்தினர். பின்னர் பொதுச்செயலாளர் அவர்கள் தி மு. கழகத்தின் கொள்கைகளையும் திராவிட நாடு பிரிவினையின் அவசியத்தையும் விளக்கி சுமார் 2 மணி நேரம் சொற்பொழிவாற்றினர். கவுந்தப்பாடி செயலாளர் இரா. துரை நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

ஹோஷியாபூர் தொடர்ச்சி

டம் அதிமதிப்பு உண்டு! சந்த்ராமின் இடைவிடா சாதி ஒழிப்புச் சேவையை அவர்கள் சிரமே லேற்றிப் புகழ்ந்து போற்றுகிறார்கள்! எங்கள் உரிமைகளின் பாதுகாவலர் சந்தராம் என்று அகமகிழ்ந்து உரைக்கின்றனர்!

டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் பில்ரிலாலுக்கும் தக்கர்தாசுக்கும் பிதா அன்னவர், அம்பேத்கார் சந்த்ராமின் சாதி ஒழிப்புப் பணிக்குக் கூட்டுத் தோழராவார்.

டாக்டர் அம்பேத்கார் சந்த்ராமுக்கு எழுதினக்கடிதக் கற்றைகளை எனக்குக் காண்பித்தார். காண்பித்துச் சொன்னார். நல்ல அழகான பேனவால் அழகான காகிதத்தில், அழகான முத்துப்போன்ற எழுத்துக்களால், அழகு ஆங்கில வார்த்தைகள் கொண்டு அழகான கருத்துக்களை வழங்கும் அழகு அம்பேத்கார்! ...என்றார் சந்த்ராம்! கண்டு, படித்து மெய் யுணர்ந்து மகிழ்ந்தேன்.

மீண்டும் பிகாரிலால், தக்கர்தாஸ் தொடர்பை எழுதத் தவறி விடுகிறேன் அதை இக்கட்டுரை நெறுக்கத்தில் அரைகுறையாக எழுதித் மனமில்லை விரிவாக எழுதினால்தான் மன ஆறுதலடையும்! ஆகவே அடுத்த கட்டுரையில் காண்போம் !

Tel: WIND. Phone: 55373

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதருஸ்-1
பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதருஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B :—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 8, கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை
" 103-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்
" கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
" வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

பஞ்சாபில் மூன்றாம் நாள்!

"திருவேடம்"

ஹோஷியார்பூர் மாட்சி!

பிகாரிலால், தக்கர்தாஸ் ஆகிய இருவரையும் சந்த்ராம் எனக்கு அறிமுகப்படுத்தினார் என்பதுவரை கடந்தவாரக் கட்டுரையில் கண்டோம்.

*

பிகாரிலாலும் தக்கர்தாஸும் பஞ்சாப் சர்க்கார் ஊழியர்கள். அவர்களது முகாம் ஹோஷியார்பூர்.

இக்கட்டுரை வரிசைகளில் குறிப்பிடப்பட்டு வரும் பஞ்சாப், இந்தியா துண்டாடப் படுவதற்கு முன்பு இருந்த பஞ்சாப்போ அல்லது துண்டாடப்பட்ட பாக்கிஸ்தான் பஞ்சாப்போ அல்ல. இவண் குறிப்பிடப்பட்டுவரும் பஞ்சாப் இந்தியாவோடு இணைந்த பஞ்சாப். அதில் சந்த்ராம் இருக்கும் பஞ்சாப் கிழக்கு பஞ்சாப் ஆகும்.

இக்கிழக்கு பஞ்சாபில்தான், ஹோஷியார்பூர் நகரம் இருக்கிறது. அந்நகரத்தைப் பெருநகரமென்றே அழைக்கலாம். நம்நாட்டிலுள்ள வேலூர் (வ. ஆ.), திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி ஆகிய நகரங்களை அதற்கு ஒப்பமைத்துக் கூறலாம். ஹோஷிரார்பூர், ஹோஷியார்பூர் ஜில்லாவின் தலைநகரமாகும்.

சிறந்த வேலைப்பாடுகளமைந்த சிறு சிறு நாசித்தூள் பெட்டகத்திலிருந்து, பெரிய பெரிய பீரோக்கள், பெட்டிகள், கட்டில்கள், இன்னபிற சமான்கள் செய்தலே அங்கு போற்றத் தகுந்த குடிசைத் தொழிலாக அமைந்திருக்கிறது.

சந்தன மரம், செம்மரம், நூக்க மரங்களையே பெரும்பாலும் உபயோகப் படுத்துகிறார்கள்.

மரவேலைச் செய்வதில் சித்திரச் செதுக்கு வேலைத் திறமையே மிகமிக வியக்கத் தக்கதாய் உள்ளது. கண்ணைப் பறித்து விடுகிறது.

கண்ணைக் கவரும் சித்திர வேலைப்பாடுகள் அமையாத மரச்சாமான்களே அங்கே செய்வதில்லை என்றுகூடக் கூறலாம்.

சித்திரங்கள் செதுக்குவதோடு மட்டுமன்றி தந்தப் பொடிகளை அதாவது டைமண்டு போலவும், ஹார்ட்ஸ் போலவும், கிளாவர் போலவும், ஸ்பேடு போலவும், கோதுமைக் கதிர்மணிகள் போலவும் வெட்டப்பட்ட தந்தப் பொடிகளை, மரத்தில் பொதியவைத்து பூங்கொடி படர்வதைப் போலவும் துடையிடையுடைய பைங்கிளியாள் நிற்பது போலவும் இருமலர்கள் முத்தமிடுவது போலவும், அன்னங்கள் அடியிட்டுச் செல்வது போலவும், யானைகள் விதவிதமான தோற்றப் பாவனைகளுடன் விளையாடுவதைப் போன்றும், சண்டையிடுவது போன்றும், போர்க்களத்தில் உக்ராவேசத்தோடு பிளிறுவதைப் போன்றும், இன்னும் இப்படிப்பட்ட மற்ற மற்ற எழில் ஓவியங்களை வடித்து எடுக்கிறார்கள். பூ வேலைப்பாடுகளுக்கு பித்தளைப் பொடிகளையும் உபயோகப் படுத்துகிறார்கள்.

இத்தொழிலே ஹோஷியார்பூருக்கு மாட்சியைத் தேடித்தருகிறது என்றால் அது மிக மிகப் பொருந்தும்!

ஏனெனின் இத்தகு எழில் ஓவியங்கள் அமைந்த அழகு மரச் சாமான்கள் பெருவிலை போகின்றன. பெரிய பெரிய மிட்டா மிராசுதாரர்கள், உயர்ந்த உத்தியோகஸ்தர்கள், பணப் பிரபுக்கள் ஆகிய பெரும் புள்ளிகள் இம்மரச் சாமான்களில் அதிக மோகம் வைத்து வாங்குகிறார்கள்.

அதோடு அவை அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா சைனா, ஜப்பான் முதலிய அயல் நாடுகளுக்கும். ஏற்றுமதியாகின்றன. பெருவாணிபம் நடைபெறுகிறது.

அயல் நாடுகள் பல அச்சாரங் கொடுத்து, வேலையை துவக்கச் சொல்லி, வேலை முடிந்ததும் முழுத்தொகை செலுத்திவிட்டு அவரவர் நாடுகளுக்கு அவரவர் சொந்த செலவிலேயே, கொண்டு செல்லுகிறார்கள். நிற்க.

ஹோஷியார்பூரில் முக்கியமான சர்க்கார் பணிமனைகள் இருக்கின்றன. கடைத்தெருக்கள் சுறுசுறுப்புக் கோலத்தோடு காட்சியளிக்கின்றன. D. A. V. கல்லூரி, உயர்நிலைப் பள்ளிகள், நடுநிலை, ஆரம்ப ஆண் பெண், பள்ளிகள் இருக்கின்றன. மாலை வேளையில் சாரைசரையாக மாணவர்கள் பள்ளிவிட்டுத் தத்தம் இல்லங்கள் செல்லும் காட்சி மனதைக் கவர்கின்றது. பெண்கள் சைகிளில் செல்லுங் காட்சி அதைவிடக் கண்கொள்ளாக் காட்சி.

இரட்டைப் பின்னல்கள் வேய்ந்து, விதவிதமான வண்ணத் துகிலால் ஆன, நீண்டு தொங்கும் கவுன்களையும், மார்பில் மாலைபோல் வளைத்தெடுத்து இரு தோள்களோடு வழியப் பின் தொங்கவிடும் 'டாக்கா மஸ்லின்' போன்ற நைஸ் கலர் மேல் அங்கிகளையும் வண்ணப் பைசாமாக்களையும், காலில் அப்பக்கத்து மிதியடிவகைகளையும் அணிந்து, அசைந்தாடிச் செல்லும், இளந்தளிர் மாணவிகளின் வரிசையும், பரிபக்குவ வயதை எட்டிப் பிடிக்கத் துடிக்கும் துடிப்புடன் காட்சியளிக்கும் கல்லூரிப் பெண்களின் கூட்டமும்—எனக்கு எழுதத் தெரியவில்லை —வருணிப்பு பிடிபடவில்லை — எனது தோழர் நண்பர் இராதாமணாளனை நீங்கள் இங்கே நினைத்துக் கொள்ளுங்கள்—நான் அங்கு அன்று அவரை நினைத்துக் கொண்டுதான் — அடடா! கண்கொள்ளாக் காட்சி! இராதாமணாளன் கொடுத்து வைக்கவில்லையே! நான் பார்த்து என்ன புண்ணியம்! நண்பன் பார்த்தாலும் 'கல்லூரிக் குயில்' என்ற ஏட்டோவியத்திலேயே அவ்வெழில் உருவங்களைத் தீட்டிப் படைத்திருப்பாரே! என்றெல்லாம் நினைத்தேன். அப்படி நினைத்தது நண்பனையும் அச்சமயம் சேர்த்து நினைத்துப் பார்த்ததினாலேயேதான்!

உண்மையில் நான் சிந்தித்ததெல்லாம்!...... இவ்வளவு பெண்கள், சென்னையையும் தோற்கடிக்கும் அளவில் படிக்கிறார்களே! பரவாயில்லை! இந்தியா முன்னேறுகிறது! ஆனால் எதிர்காலத்தில் இவர்களெல்லாம் ஆண்களுக்குப் போட்டியாக ஆபீஸ் வேலைகளுக்கு வந்தால், வேலையில்லாத் திண்டாட்டம் இரட்டிப்பாகி சோற்றுக்கு தாளம் போடவேண்டியதுதானே! கவலை கூடுமேயொழிய குறையாதே!...இப்படிப்பட்ட நினைப்புகள் வந்து விடுவதினால்தான் போலும் கதை எழுதக் கற்பனை ஊற்றுசுரப்பதில்லை!...என்றெல்லாம் அங்கே நினைத்துப் பார்த்துக் கொண்டேன்.

மாணவிகளே அந்தக் கூட்டமென்றால் மாணவர்கள் எண்ணிக்கையைக் கூறத் தேவையில்லை. பெரும்பகுதியோர் அங்கு படிப்பில் அக்கரை காட்டுகிறார்கள். அது ஒரு புதுமலர்ச்சிதான் என்று தெளிவிக்கப்பட்டேன்.

மாணவத் தோழர்களும் பள்ளிக்குப் போகும் போதும் வீடு திரும்பும் போதும் தலையில் பஞ்சாப் தலைப்பாகையோடுதான் காட்சியளிக்கிறார்கள்.

ஆனால் சாதாரண வேளைகளில், நம் பக்கத்தில் வீதியில உருண்டு புரண்டு திருப்பதிக்குப் போகிறவன், மயிரை, முன் தலைப்பக்கம் இழுத்து முடிச்சு போடுகிறானே, அப்படி போட்டுக் கொண்டு, ஒரு கையில் மாத்திரம், பஞ்சலோக காப்புக் கம்பி தவறாமல் மறந்துவிடாமல் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது அவர்கள் பரம்பரை வழக்கமாம்! நிற்க.

அடடே! என்ன ஒரே ஹோஷியார்பூர் 'ஸ்டடி லக்சராகவே' இருக்கு! பிகாரிலாலும், தக்கர்தாஸும் என்ன ஆனார்கள்!...கூறுகிறேன்!

பிகாரிலால் முகம் எப்போதும் பூத்துப் பொலிவதையே கண்டேன். செழிப்புடன் வளர்ந்தோங்கி நிற்கும் கட்டுமஸ்தான உடலை உடையவர். ஸ்டாலினை நினைவுபடுத்துகிறது அவரது மீசையும் கம்பீரத் தோற்றமும்! பஞ்சாப்பில் பிறந்தவர் அல்லவா! உயர்ந்த உத்தியோகஸ்தருக்கு உற்ற, மேலைநாட்டு நாகரீக உடைகளையே, கம்பளியில் அணிந்திருக்கிறார். சதா புகைக் குடித்துக் கொண்டேயிருக்கிறார்.

பஞ்சாப்பில், நம் பக்கத்தேயுள்ள மலையாள நாட்டைப் போன்று, புகைக் குடிப்பதில் பெரியவர் சிறியவர் என்ற பேதமே கிடையாது! யாவரும் சகஜமாகப் புகைக்கிறார்கள்—புகைத்தலுக்கு அடிமையானோர்!

பிகாரிலாலுக்குச் சந்த்ராம், 'பாபுஜீ' 'மஹாத்மா' ஆனாலும், சந்த்ராம் எதிரே புகைத்தலில் தவறில்லை என்பது அவர்கள் இருவரின் ஒப்பம்.

நான் பிகாரிலாலுக்கு அறிமுகமான உடனேயே அவருக்கு சிகரட் பிடிக்கும் நேரமாய் அந்நேரம் அமைந்தது.

அவர் பிடிக்க முற்படுவதற்கு முந்தி 'சிகரட் நாகரீக முறைப்படி' 'ப்ளீஸ்' (Please) என்று நேவிகட் டின்னினின்று ஒன்றை இழுத்துவிட்டு எனக்கு நீட்டினார்.

நான் அதுவரைக்கும் திருட்டுத்தனமாகத் தானே சிகரெட் அங்கே குடித்தேன். சந்த்ராம் தாத்தாவின் எதிரில் பிடிப்பது முறையல்ல என்பது எனது நோக்கம்.

பிகாரிலால் நீட்டிய சிகரட்டை பிடிக்கப் பழகிய நான் வேண்டாமென்று கூறுவது நாகரீகமன்று! எனவே அச்சிகரட்டை வாங்கவேண்டும்! ஆனால் சந்த்ராம் தாத்தா முன்னிலையிலா! அது எப்படி...என்று நான் விழித்து வழிந்ததைக் குறிப்பால் உணர்ந்த சந்த்ராம் தாத்தா: "If you are addicted to smoking, there is nothig wrong in yourself lighting cigarettes in my presence. I give you full freedom. Please accept Biharilal's offer, light it, and feel quite at ease and free!" அதாவது 'பிடிக்கும் பழக்கம் உண்டானால் என்னெதிரில் பிடிப்பதில் எந்தக் குற்றமும் இல்லை, தடையுமில்லை. பிகாரிலால் கொடுப்பதை வாங்கிப் பிடி. எக்கூச்சமுமில்லாமல் சுதந்தரமாயிரு' என்று அன்போடு கூறினார் சந்த்ராம்!

எனினும் மறுத்ததன் ...விடவில்லை ...பிடித்தேன்! அதிலிருந்து பஞ்சாபைவிட்டு கிளம்புகிற வரை எனக்கு, சிகரட் டின்டின்னாகச் சப்ளை செய்தவர், சந்த்ராமின் அண்ணன் மகனென்று முன்பே அறிந்த ஹேத்ராமே ஆவார்.

அச்சம்பவத்தை இன்றுகூட நினைத்துப் பார்த்தால், நாம் அவ்விதம் செய்தது சிறுபிள்ளைத்தனமல்லவா! சந்த்ராம் தாத்தாவின் பெருந்தன்மை என்றா சமாதானஞ் சொல்வது! என்ற எண்ணங்கள் என்னை ஒருவகை வாட்டியே விடுகிறது!

சந்த்ராம் புகைக்குடிப் பழக்கமே கொள்ளாதவர். ஆனால் அவர் குடும்பம் அப்படிக்கில்லை. ஹுக்கா பிரியர்கள் பலர் உளர்.

அவரும் அவரது குடும்பத்தவர்களும் புலால் உண்ணாதவர்கள்.

பிறப்பால், குயவர், கன்னார், தட்டார், தச்சர், போன்ற (Artisan Class) வகுப்பைச் சார்ந்தவர்கள்.

சாதி வித்தியாசம் பாராதவர்கள். சாதியை ஒழித்துக்கட்ட நடைமுறை வழிகளை காண்பவர்கள்.

பிகாரிலாலிடமும், தக்கர்தாஸ் இடமும் அன்பும் நட்பும் கொண்டாடுவதின் காரணமே, அவர்கள் இருவரும் பிறப்பால் ஆதிதிராவிடர்கள்! தீண்டாதவர்கள் என ஒதுக்கப்பட்டவர்கள்! தாழ்ந்த இனமக்கள் என இடித்துரைக்கப்பட்டவர்கள்! என்பதேயாகும்!

சந்த்ராம் இல்லம் தாழ்ந்த இன மக்களின் புகலிடமென்றால் போதும்! அவ்வளவு பரிவும் பாசமும் தாழ்ந்த இன மக்களுக்கு சந்த்ராமிடம்! பலப்பல தாழ்ந்த இன சீக்கிய மக்களுக்கும், பஞ்சாபிய மக்களுக்கும், சந்த்ராம் பிதாபிதாவேதான்! ஆகவேதான் 'பாபுஜீ!' என்ற பட்டமும் அவருக்கு அங்கே நீங்கா நின்று புகழ் மணக்கச் செய்கிறது!

எந்த வேளையில் இக்கட்டுரைப் பகுதியை எழுதத் துவங்கினேனோ! பிகாரிலாலும், தக்கர்தாஸும் என்பால் கொண்ட தொடர்பின் அனுபவங்களையும், பாசத்தின் அழுத்தமான பிடியினையும், பரிவின் கனிவையும், எழுத விடாமல் பற்பல சிந்தனைகள் குறுக்கிட்டுத் தடைபடுத்திக் கொண்டே இருக்கின்றனவே!

பிகாரிலாலுக்கும் தக்கர்தாசுக்கும் சந்த்ராமி

12-ம் பக்கம்

திராவிடப் பூங்கா

பணமா பெரிது?

"கையட்" என்பது பர்மா நாணயம். ஒரு பதினைந்து "கையட்" கொடுப்பதற்குத் தயங்கியதால் யுனூஸ் என்ற ரங்கூன் ரைஸ்மில் மானேஜர், தமது மெய்ப் பாதி மனைவியையும், உயிருக்கு உயிரான நான்கு வயது அருமை மகளையும் வெள்ளச் சுருளுக்குப் பலியாக்கி தனித்து நின்று புத்தி தடுமாற்றமுற்றுத் தவிக்கிறார்!

யுனூஸ் தமது மனைவியுடனும் மகனுடனும், அண்டையிலுள்ளச் சுற்றத்தாரைக் கண்டு திரும்பும் வழியில் மின்சாங் என்னும் நதி குறுக்கிட்டது. அந்நதியில் எதிர் பாராவண்ணம் வெள்ளம் பெருக் கெடுத்தது. அதைக் கண்ட யுனூஸ் கரையிலேயே காரை நிறுத்திக் காத்துக்கிடந்தார். நீண்ட நேரத்திற்குப் பிறகே வெள்ளம் தாழ்ந்தது ஆனால் அந்நதி ஆபத்தானது என்று அங்குள்ள ஆற்று வழிகாட்டிகளுக்குத்தான் தெரியும்!

அவ் ஆற்று வழிகாட்டி ஒருவர் யுனூஸ் கார் பக்கம் வந்து 'ஐயா! எனக்கு இருபத்தைந்து "கையட்" பணங் கொடுத்தால், தங்களுக்குத் தக்க பாதை காட்டி அக்கரை கொண்டு விடுகிறேன்' என்றார்.

இருபத்தைந்து "கையட்" கொடுக்க முடியாது. பத்து 'கையட்' தருகிறேன் என்றார் யுனூஸ்.

ஒப்பவில்லை வழிகாட்டி!

'போடா போ! ஆற்றில் இரண்டடிக்கு மேல் வெள்ளம் இல்லை. நானே யார் தயவுமின்றி கடந்து விடுவேன்' என்று காரை விசை முடுக்கி ஓட்டினார்.

நட்டாற்றில் நின்று விட்டது. வெள்ளச் சுருளில் சிக்கிக் கொண்டார். அபாயகரமான சுருள்!

கார் நகரவில்லை. காரை விட்டு யுனூஸ் அவர் மனைவி, நான்கு வயது குழந்தை, வெளியே குதித்து, உதவி கோரி கூச்சலிடுகிறார்கள்.

உதவிகிடைப்பதாக இல்லை. '25 கேட்டான். 10 தான் கொடுப்பேன் என்றேனே! 15 மிச்சம் பிடிக்கப் பார்த்தேனே! இப்போது எங்களைக் காப்பாற்றுவார் யார்? அந்தோ! எனது சட்டைப்பையில் ஒன்றல்ல பத்தல்ல! ஏழுஆயிரம் "கையட்" காசுகள் வைத்திருந்து யாது பயன்?' என்று நிலைதடுமாறி அலறுகிறார் யுனூஸ்.

வெள்ளச் சுருளில் அடித்துக் கொண்டு போயே விட்டார்கள் அவர்தம் மெய்ப்பாதி மனைவியும் அருமை மகற் குழந்தையும்! ஐயோ! நானும் போகிறேனே! எனக் கதறி மனமுடைந்து சாகிறார்.

அவர் மட்டும் காப்பாற்றப் பட்டுக் கரை கொணரப்பட்டார்!

மனைவி, மகள், கார், வெள்ளங் கொண்டு சென்றது!

ஏழாயிரம் "கையட்" காசு சட்டைப் பையில்! அதனுடன் பித்தம் பிடித்தவர் போல் அலைகிறார்!

என் செய்வது? 15 'கையட்' (KYAT காசுகளுக்கு லோபித்தனம் பண்ணப்போய் இக்கதி!

பணமா பெரிது? உயிர் பெரிதல்லவா? இந்த எண்ணம் ஆரம்பத்தில் இருக்க வேண்டாமா?

தாம்பாளத் தட்டு!

'நாஃபென்' என்பது ஒரு செய்திஸ்தாபனம் என்பது பலருக்குத் தெரிந்திருக்கலாம்.

அது ஐந்து ஆங்கில எழுத்துக்களைக் கொண்டு விளங்குகிறது.

Nafen:- இவ்வைந்து எழுத்துக்கள் தான் அந்த 'நாஃபென்' என்பது.

அதன் விரிவு Near and Far East News என்பதாகும். அதாவது அருகாமையிலும் தூரத்துக் கிழக்கிலும் நிலவும் செய்திகள் என்று பொருள்படும்.

அந்த ஸ்தாபனம், சென்னையில் சுதேசமித்திரனுக்குச் சொந்தமான, மவுண்ட்ரோடில் அமைந்த, விக்டரி ஹவுஸ் (வெற்றி இல்லம்) கட்டிடத்தில் பணியாற்றுகிறது.

அது வழங்கும் செய்திகளில் ஒரு அற்புதச் செய்தி கிடைத்திருக்கிறது; அது இது:

"பம்பாய் நகரத்தில் பிளாஸ்டிக் வகையருச் சாமான்கள் செய்யும் தொழிற்சாலை ஒன்று உளது. அது இவ்வாண்டு இறுதியில் நீண்ட நேரமாக ஓடக்கூடிய கிராமபோன் இசைத் தட்டுகள் செய்து முடிக்க இருக்கின்றதாம். அந்தஇசைத்தட்டு விடாது 45 நிமிடங்கள், அதாவது முக்கால் மணி நேரம் பாடக்கூடியதா யமையுமாம். இத்தகு இசைத்தட்டுகளைச்செய்ய மத்திய அரசாங்க அனுமதியும் கிடைத்துவிட்டதாம். இது செய்தி.

தாம்பாளத் தட்டைப்போல் விளங்கப் போகும் அவ்விசைத் தட்டுகள் பற்பல விதமான பாடல்களைப் பற்பல மெட்டுகளிலும், ராகங்களிலும் அமைத்தால் நலமாயிருக்கும். ஆனால் ஒரு சந்தேகம்! முக்கால்மணி நேரத்திற்கும் தேய்ந்து ஓய்ந்து போகாமல் இருக்கும் ஊசியும், பெட்டிற்குச் சாவி கொள்ளும் சக்தியும், எப்படி அமையும் என்பதே தான் நம் சந்தேகம்!

தெய்வம் எது?

*

வி. ஸ. காண்டேகர்.

●

மனிதன் மனிதனாகவே பிறந்துவிடவில்லை. உலகம் அவனை மனிதனாக்குகிறது.

*

நாம் தெய்வம் என்று கல்லை வழிபடுகிறோமே, அது முட்டாள்தனம். உலகத்தில் ஒரே ஒரு தெய்வந்தான் உண்டு. அதாவது பண்புடைய மனிதனே தெய்வம். இதையன்றிஉலகத்தில் தெய்வமும் இல்லை, அரக்கனும் இல்லை.

*

அந்தஸ்து! மரியாதை! எத்தனை பொய்யான தெய்வங்களை யெல்லாம் மனிதன் படைத்து வைக்கிறான். இவ்வளவும் எதற்கு? அந்த தெய்வங்களை வழிபடுவதாக ஆடம்பரம் செய்து கொண்டு எளிய மக்களை ஏமாற்றுவதற்குத் தானே! மதியற்ற மாந்தரைக் கொள்ளை யடிப்பதற்குத்தானே! உலகத்தில் தன் போலிப் பெருமையை நிலைக்க வைப்பதற்குத்தானே,

*

உண்மை தெய்வத்தைத் தொலைவில் வீசி, எறிந்து விட்டு நாம் கல்லுக்குப் பூசை செய்கிறோம்.

—தொகுத்தது : வே. சண்முகம்

சீர்திருத்தம் வேண்டி !

நண்பரீர்! நீவிர் அஞ்சலில் அனுப்பிய உமது திருமண அழைப்பு இதழ் கண்டு களிப்படைவதற்கு பதிலாக பதறித் தவித்தேன்!

ஸ்ரீ கண்ணபிரான் திருவருளை முன்னிட்டா உமது இத்திருமணம் நிகழ்கிறது வெட்கம்!

கண்ணன் என்பவன் கசடன்! காமப்பித்தன்; கன்னிலோலன்! சகோதரர்களை, சகோதரர்கள் மீதே மூட்ட விட்டு வேடிக்கைப் பார்த்தக் குரோதச்சாரதி! வேடன் வில்லிற்கு இறையாகி மாண்ட "கீதை வில்லன்" அவன் திருவருளா துணை வேண்டும்?

போகட்டும்! மிருக சீரிட நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில், தனுர் லக்கினத்திலா உமக்குத் 'திருமணம்?'—

நக்ஷத்திரங்களெல்லாம் ஸ்டார்ஸ் Stars பிளானட்ஸ் (Planets) அவை விஞ்ஞான உலகத்தைச் சேர்ந்தவை! அவைகளை ஞானிகள் என்று பீத்திக் கொள்கிற அசல் அஞ்ஞானிகள், மதத்தோடு பிணைத்துப் புராணக் கதைகள் கட்டி விட்டார்கள்— என்று விஞ்ஞானப் பேராசிரியர்களிடம் விளக்கம் பெற்றதாக நீ கூறக் கேட்டிருக்கிறேனே! நக்ஷத்திரம் என்ன வாழ்கிறது இப்போது உமக்கு?

சந்திரனை ஆணென்றும், நக்ஷத்திரங்கள் இருபத்தேழை அரிச்சந்திரனது மனைவிகள் என்றும் பித்தலாட்டப் புரட்டுக்கு அடிமைப்பட்டு விட்டீர்களே!

அந்தோ! நண்பா! இப்படி யெல்லாம் உமது போக்கு இன்று உருவெடுக்கவா விஞ்ஞானம் பயின்றாய்?

எல்லாம் வேஷந்தானே? இல்லாவிடின் இன்று ஆரியச் சின்னமாம் பூணூலை மார்பில் மாட்டிக்கொள்ள இசைவீரோ? அரசாணிக்கால் கங்கணம் கட்டுவீரோ? அம்மி மிதிப்பீரோ? பகலை இருளாக்கி, காமாக்ஷி விளக்குடன், குடவிளக்கு, ஆயிரங்கிளை அகல்விளக்கேற்றி, அதன் நடுவே பார்ப்பனன் மூட்டும் ஓமம் எரிப்புக்கு நெய் விட்டு தீ வளர்ப்பீரோ? பட்டப்பகலில் பந்தலை நீக்கி கண்ணுக்குத் தெரியவே தெரியாத அருந்ததி நக்ஷத்திர சாக்ஷியாக என்று உளறி, பார்ப்பனன் கையிலெடுத்துக் கொடுக்கும் 'தாலி' என்னும் பெண் அடிமைச் சின்னத்தை உமது இல்லாளாக வீற்றிருக்கும் மங்கைக்குப் பூணுவீரோ?

இந்த நிலையில், எம்மை இரண்டு நாள் முன்னதாக வந்தருளுமாறுக் கோருகிறாய்! "தம்பதிகளை" ஆசீர்வதிக்க விழைகிறாய்!

எது எப்படி போயினும் உங்களை வாழ்த்தாது விடுக்கும் உள்ளம் உடையவனும் அல்லன் யான்! நீர் இவ்விஷயத்தில் தவறிவிட்டீர்! காரணம்? உம்மிடம் திண்மைக் குணம் இல்லை! "எண்ணிய எண்ணியாங்கு எய்துபர் எண்ணியர் திண்ணிராகப் பெறின்"—என்ற இக்குறள் வாசகத்தையே உமது இவ்வைதிகத் திருமணத்தின்போது நினைவூட்டி முடிக்கிறேன்!

●